# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2029 கார்த்திகை 28 திங்கட்கிழமை (14-12-1998) UTHAYAN-A Lively National Tamil Daily க திர்:1

5


## லங்கா முடித்த இங்கிருந்து ஆயிரம் பேருடன் செல்லும்

### இன்றுடிக்கெட் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ. 14

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு நாளை மறுதினம் 'லங்கா முடித்த' கப்பல் மூலம் ஆயிரம் பயணிகள் அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இந்தச் சேவையில் பயணம் செய்பவர்களுக்கு பயண டிக்கெட்டுக்கள் இன்று முற்பகல் 11.00 மணி முதல் தமது அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்றும் —

கொழும்பு செல்வதற்காக ஒக்ரோபர் மாதத்துக்குமுன் பதிவு செய்தவர்கள் மற்றும் விமானம் மூலம் வந்து திரும்ப முடியாத நிலையில் உள்ளவர்கள் ஆகியோருக்கு இந்தச் சேவையில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும்—சிவில் நிர்

(10 ஆம் பக்கம் பார்க்க)



பதவி துறக்க நேரிட்டாலும் கவலைப்படார். அடுத்த தேர்தலில் மீண்டும் ஆளுங் கட்சி அமைச்சர்தானே......!

## நகரை அதிரவைத்த குண்டு நேற்று மர்மம் துலங்கியது

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ். நகரில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த படையினரின் கிரனேட் தவறுதலாக வீழ்ந்து வெடித்ததன் சத்தமே நேற்று முன்தினம் இரவு கேட்ட சத்தம் என்று தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு நகரப்பகுதியில் குண்டு ஒன்று வெடித்த சத்தம் கேட்டதும்—

அதைத் தொடர்ந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதும்—தெரிந்தவையே.

கூட்டணி அலுவலகத்தின் மேல்மாடியில் இருந்த படையினரின் கிரனேட் அருகில் உள்ள வளவுக்குள் வீழ்ந்து வெடித்தது என்றும்—

இதனால் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் —தெரிவிக்கப்பட்டது.

(இ-3-6)

# ஈழத் தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள்!

## நகருக்கு பயணிகள் வந்தனர்

யாழ்ப்பாணம், டிசெ. 14

திருகோணமலையில் இருந்து 'லங்கா முடித்த' கப்பலில் பயணம் செய்த பயணிகளில் தனிப்பட்ட பயணிகள் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நேற்றிரவு யாழ். பஸ் நிலையம் வந்த 300 பேர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க காங்கிரஸ் கண்டனம் தெரிவிப்பு

வாஷிங்டன், டிசெம்பர் 14

**இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை மிக மோசமான நிலையை அடைந்துள்ளது.**

**அமெரிக்க காங்கிரஸின் மனித உரிமைகள் குழுவின் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க இராஜாங்க அமைச்சில் நடந்தபோது மேற்கண்டவாறு இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.**

அமெரிக்க காங்கிரஸின் மனித உரிமைகள் குழுவின் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் நடந்த சமயம் ''இலங்கை மனித உரிமைகள் தொடர்பான வட்டமேசை'' என்ற விசேட நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது.

சமாதானத்துக்கும் நீதிக்குமான ஆசிய – பசுபிக் மையத்தைச் சேர்ந்த ஒலின் மலோன், இலங்கைக்கான சர்வதேச செயலணியைச் சேர்ந்த றிச்சேர்ட் ரீஒக்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிராம சேவையாளர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 14

நல்லூர் மத்தி (ஜே. 107) பிரிவு கிராமசேவையாளர் இராமலிங்கம் சந்திரகுமார் நேற்று முன்தினம் நண்பகல் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார்,

இவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நல்லூர் சட்டநாதர் வீதியைச்சேர்ந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மின்மாற்றி தகர்ப்பு

மட்டக்களப்பு, டிசெ. 14

மட்டக்களப்பு அமிர்தகழி சித்தி விநாயகர் மகாவித்தியாலயச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த மின்மாற்றி நேற்று முன்தினம் இரவு 10-45 மணிக்கு குண்டு வைத்து இனந்தெரியாதோரால் தகர்க்கப்பட்டுள்ளது.

(இ-3-21)

## மனித உரிமை தினத்தில் மன்னாரில் ஊர்வலம்

மனித உரிமைகள் தினத்தையொட்டி மன்னாரில் நேற்று ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

மன்னார் மறை மாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான மனித உரிமைகள் ஆணைக்குழு, மன்னார் பிரஜைகள் குழு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்த ஊர்வலம் நேற்றுக் காலை 11 மணிக்கு செபஸ்தியார் ஆலயத்தில் மூன்று மதங்களின் குருமாரின் ஆசியுடன் ஆரம்பமாகி நகரில் பல இடங்களுக்கும் சென்று மீண்டும் செபஸ்தியார் ஆலயத்தில் முடிவடைந்தது.

''மனித உரிமைகளுக்கு மதிப்புக்கொடு'' ''யுத்த நிறுத்தம் மேற்கொண்டு பேச்சை ஆரம்பி'' என்று கோரும் சுலோகங்கள் அடங்கிய அட்டைகளை ஊர்வலத்தில் மக்கள் தாங்கிச் சென்றனர்.

(இ-3-164)

## சிறைச்சாலை அதிகாரி மோதலில் சிக்கிப் பலி!

### காரைதீவில் சம்பவம்

மட்டக்களப்பு, டிசெ. 14

அம்பாறை மாவட்டம், காரைதீவில் சூட்டுக் காயத்துடன் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 9-45 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் அப்பகுதியில் மோதல் ஒன்று இடம்பெற்றதாகவும்—

இந்த மோதலில் சிக்கி இவர் உயிரிழந்தார் என்றும்—படைவட்டாரங்கள் தெரிவித்தன.

தங்கராசர் சிவராசா (வயது 27) என்ற சிறைச்சாலை உத்தியோகத்தரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

(இ-3-21)

## தொண்டாவை பதவி துறக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை

லண்டன், டிசெ. 14

அமைச்சர் தொண்டமானின் அமைச்சுக்கு நிதி ஒதுக்குவது தொடர்பான பிரேரணை கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தோல்வியுற்றதையடுத்து அமைச்சர் பதவியை தொண்டமான் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளில் அனைத்துப் பிரேரணைகளும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நிறைவேறிய வேளையில் தொண்டமானின் பிரேரணை மட்டும் தோல்வியடைந்தது அரசுக்கு ஒரு பின்னடைவு என பி.பி.சி. தெரிவித்தது.

நாடாளுமன்றில் தொண்டமானுக்கு ஏற்பட்ட தோல்வி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னம்பிட்டியில் கைதான அறுவரும் கொழும்புக்கு!

மட்டக்களப்பு, டிசெ. 14

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்கு சென்ற பஸ்ஸில் இருந்து வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதான 6 பேரும் நேற்று கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டனர்.

மன்னம்பிட்டி பொலீஸ் சோதனை நிலையத்தில் நேற்று முன்தினம் சோதனை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சபையில் சமுகமளிக்காத எம். பிக்கள் ஜனாதிபதி விளக்கம் கோருவார்

கொழும்பு, டிசெ. 14

கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குழு நிலை விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் சமுகமளிக்கத் தவறிய அரச எம். பிக்களிடம் ஜனாதிபதி விளக்கம் கோரவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் தொண்டமானின் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு நாடாளுமன்றத்தில் தோல்வி அடைந்ததையடுத்துமறுநாள் ஜனாதிபதி அமைச்சர்களை உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து இந்த முடிவை எடுத்ததாகக் கூறப்பட்டது.

பலமுறை அரசதரப்பு எம். பிக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டும் அவர்கள் ஒழுங்காக சபையில் சமுகமளிக்கா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முத்தையன்கட்டு பகுதியில் கிபிர் விமானங்கள் தாக்கு

வவுனியா, டிசெ. 14

இராணுவக் கட்டுப்பாடற்ற முத்தையன்கட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் கிபிர் விமானங்கள் தாக்குதல் நடத்தின என்று வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னி நிவாரண வெட்டு

# லண்டனில் தொடர்ந்து விழிப்புப் போராட்டம்

கொழும்பு, டிசெ. 14

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிவாரண வெட்டைக் கண்டித்து லண்டனில் தொடர்ந்து விழிப்புப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

13 ஆவது வாரமாக வெள்ளிக்கிழமைகளில் இப்போராட்டம் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் முன்னால் இந்த விழிப்புப் போராட்டம் இடம் பெற்றது.

இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். விழிப்புப் போராட்டத்தையடுத்து லண்டனில் வாழும் தமிழ் மக்களின் சார்பில் மகஜர் ஒன்றும் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

நிவாரண வெட்டை உடனடியாக நீக்கும்படி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்று அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் லண்டன் உபபிரதிநிதியுடன் விழிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்ச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துரையாடினார்கள். வன்னி மக்களின் நிலைமைகளைத் தெளிவாக எடுத்து விளக்கியதுடன் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை உடனடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ்ச்சங்கப் பிரதிநிதிகள் வற்புறுத்தினார்கள்.

(ஐ-6)


ஆசிரியர்களுக்கான

ஊக்குவிப்பு கொடுப்பனவுப் படிவம்

விற்பனையாகிறது

தொடர்பு:

**கவிதா ரேடர்ஸ்**

(வேலாயுதம் மகாவித்தியாலயம் முன்பாக)

பருத்தித்துறை

(சி/5792)



**றேடியன்ற் இன்ஸ்ரியூட்**

கச்சேரி கிழக்கு வீதி, சுண்டுக்குளி.

**புதிய கல்வியாண்டு**

ஆரம்பம் இன்று 14—12—98 பி. ப. 3 மணி

ஆண்டு 5 முதல் A/L வரை

அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

— நிர்வாகி

(61316)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**சிதம்பரப்பிள்ளை புண்ணியமூர்த்தி**

(காரைநகர் சந்திரந்தை)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02—05—1962 | 07—12—1997 |

அன்பின் திருவுருவாய் எம்முடன் கலந்திருந்து
அணையாத ஒளிவிளக்காய் ஒளிவீசி
பாசத்தின் பிறப்பிடமாய் மலர்ந்திருந்து
பண்பின் உயர்விடமாய் வாழ்ந்திருந்து
இறைவனடி எய்திய எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆறாத்துயருடன்
**குடும்பத்தினர்.**

178/1 அரசடி வீதி,
கந்தர்மடம்.

(61313)

## கிணறுகள் புனரமைப்பு

நவாலி, டிசெ. 14

ஜே-88 கிராம சேவையாளர் பிரிவில் மானிப்பாய் ஆலடிச் சந்தி, ஆறுகால்மடம், காக்கைதீவு ஆகிய இடங்களிலுள்ள 3 பொதுக் கிணறுகள் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென மேற்படி நிறுவனம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(ஐ-100)


**எமது புதிய வெளியீடு!**

கரன், குஷ்பு
நடித்த
**கண்ணாத்தாள்**

சுரேஷ்கோபி, வினித்
நடித்த
**ஹவே**

புதிய போஸ்ரர்கள்
விற்பனைக்குண்டு.

**விஷ்ணு**
**வீடியோ சென்ரர்**
துரை வீதி, கோண்டாவில்.

(61317)



**லிபேட்டி**
தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
**அஜித் - தேவயானி**
நடித்த
உயிரோடு உயிராக
நாளை முதல்
**பிரகாஸ்ராஜ், குஷ்பு, மணிவண்ணன்**
நடித்த
குருபார்வை
தினசரி:- 10 30, 2-30
(பழைய நேரம்)
தொலைபேசி:
070 - 212223

(61225)



**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்.
30 அடி
அகல வெண் திரையில்
**விஜயகாந் (இரு வேடம்) குஷ்பு, செந்தில்**
நடித்த
வீரம் வெளைஞ்ச
**மண்ணு**
16 ஆம் திகதி முதல்
திரைப்பட
கூட்டுத்தாபன ரீல்ஸ்
வெளியீடுகுதூகல ஆரம்பம்
காதல் கோட்டை
காட்சிகள் - 10.30-2.30

(சி/5791)



**றீகல்**
டாக்கீஸ்
ஈச்சமோட்டை.
**கரன், குஷ்பு, வடிவேல்**
நடித்த
**கண்ணாத்தாள்**
(புதிய வெளியீடு)
தினசரி: 10-30, 2-30

(61319)



யாழ் **றீகல்**
வெண்திரை
**கரன், குஷ்பு வடிவேல்**
நடித்த
**கண்ணாத்தாள்**
(புதிய வெளியீடு)
10-30, 2-30 மணி

(61319)


## மரண அறிவித்தல்கள்

### வெற்றிவேலு தவராஜசிங்கம்

நீராவியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், சென்னையை வதிவிடமாகவும் கொண்ட வெற்றிவேலு தவராஜசிங்கம் 12-12-98 இரவு அகால மரணமானார்.

அன்னார் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பெரிய ஆறுமுகத்தார் மகன் வெற்றிவேலுவின் (பொன்னுத்துரை) (முன்னாள் முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், நீராவியடி) சிரேஷ்ட புதல்வனான, தவராஜசிங்கம் (முன்னாள் முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம்), சொர்ணம்மா ஆகியோரின் அன்பு மகனும், நகுலராணியின் அன்புக் கணவரும், லோகிதனின் அன்புத் தந்தையாரும், புஸ்பராசசிங்கம் (பிரான்ஸ்), வில்வராசசிங்கம் (பிரான்ஸ்), சபராஜசிங்கம் (பிரான்ஸ்), சற்குணாம்பிகை (யாழ்ப்பாணம்) அமிர்தாம்பிகை (ஜேர்மனி), சுகிர்தாம்பிகை (பிரான்ஸ்), கிருகதாம்பிகை (சுவீடன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசாமி, விஜயரட்னம், ஜெயபாலசிங்கம், பாலசுப்பிரமணியம், சூர்யகுமாரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சென்னையில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சி. சற்குணாம்பிகை**
(சகோதரி)

சி சிவசாமி,
37/2, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(61314)

### சுப்பிரமணியம் தம்பிராஜா

(ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

இருபாலையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் இருபாலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா 06-12-1998 இல் காலமானார்

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் நாகரத்தினம் அருளம்மா தம்பதிகளின் மருமகனும் நீலாதேவியின் அன்புக் கணவரும் தயாளினி (கனடா), பிறேமளினி, ஜெயாளினி (கனடா), கேமளினி, தேவலினி, பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தயானந்தன் (பொறியியலாளர், கனடா), தயாபரன் (இத்தாலி), கஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், நடராஜா, தவராஜா ஆகியோரின் சகோதரனும் ஜீர்த்தனா, ஜீவனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-12-98) திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(61309)

### திருமதி சுவாம்பிள்ளை லிவினம்மா

(மிருசுவில்)

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுவாம்பிள்ளை லிவினம்மா 13. 12. 98 ஞாயிறன்று காலமானார்.

அன்னார் சுவாம்பிள்ளையின் அன்பு மனைவியும் இராசரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர், வவுனியா,) இம்மனுவேல் யேசுரத்தினம் (ஜெயம்) அவர்களின் அன்புத் தாயாரும், பிறிஜற் (இளைப்பாறியஆசிரியை, சுருவில்), மேரி றீற்றா (இளவாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சகாயினி, சாளினி, ஒஸ்மன் றெஜி, எழிலி, அமலி, கொன்சி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 14- 12-98 திங்கட்கிழமை காலை 9. 00 மணிக்கு புனித நீக்கிலஸ் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று மிருசுவில் கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**சு. இ. யேசுரத்தினம் (ஜெயம்)**
(மகன்)

மிருசுவில்.

(61308)

### திருமதி இளையதம்பி நேசம்மா

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இளையதம்பி நேசம்மா அவர்கள் 8-12-1998 செவ்வாய்க்கிழமை அன்று புதுக்குடியிருப்பில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான இளையதம்பியின் (D.M.O.) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசசிங்கம், புவனேஸ்வரன் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரன் மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி, செல்வரத்தினம், அனந்தலெட்சுமி, றோய் செல்லப்பா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயப்பத்மலோசன், ஜெயப்பிரம்மலோசன் (குஞ்சுமணி), பத்மலோஜனி ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 9-12-1998 புதன்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**இ. ரமேஸ்**
(பேரன்)

(61306)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலைத் துண்டம் பெறுவதற்கு 50 ஆயிரம் பேர் விண்ணப்பம்

## ஆயினும் 10 ஆயிரம் துண்டங்களே வரும்

அரியாலை டிசெ. 14

யாழ். மாவட்டத்திற்குக் கப்பல் மூலம் எடுத்து வரப்பட உள்ள வெற்றிலைத் துண்டங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர்.

ஆனால் கப்பலில் 10 ஆயிரத்திற்கு உட்பட்ட வெற்றிலைத் துண்டங்களே எடுத்து வரப்பட்டு இருப்பதாக யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் இவ்வார இறுதிக்குள் எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படும் வெற்றிலைத் துண்டங்களுக்குப் பெரும் எண்ணிக்கையானோர் விண்ணப்பித்துள்ளனர்.

முன் கூட்டியே விண்ணப்பித்துள்ளோருக்கே முன்னுரிமை அடிப்படையில் இத்துண்டங்கள் வழங்கப்படும் — என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

இக்கப்பலில் 4 ஆயிரம்வரையிலான அன்னாசித்துண்டங்களும் எடுத்துவரப்பட உள்ளன. (ஐ – 17)

## கோப்பாய் பகுதியில் நாய்களுக்கு ஊசி

அச்சுவேலி, டிசெ. 14

கோப்பாய் கால்நடை வைத்தியபிரிவில் நாய்களுக்கு விசர் நோய்த்தடை ஊசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

இந்த வாரம் ஊசி மருந்து ஏற்றப்படவுள்ள இடங்களின் விவரம் வருமாறு:-

**திங்கள்**

நீர்வேலி பரமேஸ்வரி சனசமூக நிலையம், அரசகேசரி பிள்ளையார் கோயில் சனசமூக நிலையம், நீர்வேலி வடக்கு காமாட்சி அம்மன் சனசமூக நிலையம், நீர்வேலி வடக்கு ராதா சனசமூக நிலையம்.

**செவ்வாய்**

இராமுப்பிள்ளை பாடசாலை — கரந்தன், நீர்வேலி தெற்கு கந்தசாமி கோயிலடி சனசமூக நிலையம், நீர்வேலி வீரபத்திரர் கோயிலடி, நீர்வேலி தெற்கு கிளிகடை.

**புதன்**

உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி, உரும்பிராய் மேற்கு கணேச சனசமூக நிலையம், உரும்பிராய் பிரதேச சபை அலுவலகம், சரஸ்வதி கொலனி—நீர்வேலி,.

**வியாழன்**

உரும்பிராய் கிழக்கு றோ. க. பாடசாலை, உரும்பிராய் கிழக்கு பாரதி சனசமூகநிலையம், உரும்பிராய் கிழக்கு காந்திஜீ சனசமூக நிலையம், உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலையம்.

**வெள்ளி**

அன்னங்கை சனசமூகநிலையம் உரும்பிராய் மேற்கு, மூன்று கோயிலடி உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் மேற்கு விளையாட்டுக்கழகம்.

**சனி**

நீர்வேலி கால்நடை வைத்திய அலுவலகம்.

**திங்கள்**

ஊரெழு பிள்ளையார் கோயிலடி, ஊரெழு உதயதாரகை சனசமூக நிலையம், கலைவாணி சனசமூக நிலையம் கரந்தன் (இ-11)

## கிணறுகளில் வெள்ள நீர்

வலி. வடக்கு, டிசெ 14

தொடர்ந்து பெய்த மழை காரணமாகப் பல இடங்களில் குடி தண்ணீர் பெற முடியாத நிலைமை இருந்து வருகிறது

கிணறுகளில் வெள்ள நீர் சென்றதே இதற்குக் காரணம். (இ-86)

## அடிக்கடி மின் தடை

உரும்பிராய் டிசெ. 14

உரும்பிராய்ப் பிரதேசத்தில் மின்சார விநியோகம் சீரின்றி உள்ளது.

கடந்த வெள்ளி, சனி ஆகிய நாள்களில் மாலை, இரவு நேரங்களில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை முன்னிரவு முழுவதும் இப்பகுதி இருளில் மூழ்கியது. (ஐ-154)

## மிருசுவில் பகுதியில் காய்ச்சல் பரவுகிறது

தென்மராட்சி, டிசெ. 14

மிருசுவில் பகுதியில் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை கடந்த இரு வாரங்களாக அதிகரித்து வருகிறது.

மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு தினமும் 50-க்கு மேற்பட்டோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இப் பகுதியில் சுகாதாரத் திணைக்களத்தின் மலேரியா தடுப்புப் பிரிவினர், சில தொண்டர் நிறுவனங்கள் ஆகியவை மேற்கொண்ட சுகாதார நடவடிக்கைகளால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட காய்ச்சல் அண்மையில் பெய்த மழையை அடுத்து மீண்டும் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் ஆயிரத்து 125 பேரும், இம்மாதம் 7ஆம் திகதி 356 பேரும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மிருசுவில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த ஆஸ்பத்திரிக்கு தொற்று நோய் நுண்ணியலாளர் நியமிக்கப்பட்டுள்ளதால் உடனுக்குடன் இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் பி. வி. தம்பித்துரை தெரிவித்தார். (இ-117)

## உள மேம்பாட்டுக் கருத்தரங்கு

வலி. தென்மேற்கு டிசெ. 14

சமூக உளமேம்பாட்டுக் கருத்தரங்கு கடந்த புதனன்று நவாலி வடக்கு சிறுவர்பாடசாலையில் இடம் பெற்றது

யாழ். அகவாழ்வு பிரதிநிதி எஸ். ராஜேந்திரன், கே. சதானந்தன் முன்பள்ளி ஆசிரியர் செல்வி இ. இந்திராணி தேவி, நவாலி வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் நா. இரவி ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர் (ஐ-185)

# நெருக்கடிக்கு மத்தியில் கூட்டுறவு ஊழியரின் பணி போற்றுதற்குரியது

## கௌரவிப்பு விழாவில் உரை

அரியாலை, டிசெ. 14

தற்போதைய இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் கூட்டுறவு ஊழியர்கள் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வருவது பாராட்டுக்குரியது. குறைந்தளவு வேதனத்துடன் மக்களுக்குச் சேவையாற்றி கூட்டுறவுத்துறையில் இருந்து ஓய்வுபெறும் ஊழியர்களைப்பாராட்டிக் கௌரவிப்பது அனைவரினதும் கடமையாகும்.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும். மாவட்ட விவசாயக் கூட்டுறவு. உற்பத்திச்சமாசத்தின் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் கூட்டுறவுச் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுறவு ஊழியர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெற்றால் அவர்களின் சேவையைக் கௌரவிக்கும் விழாவைக் காலம் தாழ்த்தாது விரைவாக நடத்துவதே சிறந்தது. இதற்கு கூட்டுறவு ஊழியர்களின் பங்கு மிக முக்கியமானது — என்றும் அவர் தெரிவித்தார்.

விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் —

இடம் பெயர்வுக்கு மத்தியிலும் கூட்டுறவுச் சங்கத்தின் உடைமைகள் மற்றும் பொருள்களைபாதுகாப்பாகப் பேணி வைத்தவர்கள் கூட்டுறவு ஊழியர்களே. கூட்டுறவுத்துறையில் இருந்து ஓய்வு பெறும் சேவையாளரைப் பாராட்டி கௌரவிப்பது கூட்டுறவு அமைப்புக்களின் முக்கிய பணியாக இருக்கவேண்டும் — என்று தெரிவித்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோ. திருநாவுக்கரசு, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் செ. திருச்செல்வம், யாழ். பலநோ. கூ. சங்க உபதலைவர் பெ. யேக்கப், சங்க இயக்குநர்களான எஸ். ரி. கணநாதன், சபா. தியாகராஜா, சி. தார்சீசியஸ், கே. யோகரத்தினம், வே. குணநாயகம் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

சங்க ஊழியர்கள் பாராட்டுரையாற்றினார்கள். ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-17)

# செய்திக் கொத்து

### ஒளி விழா

வலி. தெற்கு, டிசெ. 14

மல்வம் புதுமடம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளி விழா அண்மையில் அதிபர் நா. சிவநேசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக உடுவில் கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் கலந்து கொண்டார்.

ஓய்வு பெற்ற அதிபர் டொமினிக் வாழ்த்துரை வழங்கினார். உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் நடராஜசுந்தரம் சிறப்புரையாற்றினார். (ஐ-152)

### மருந்தாளர் இல்லை

சண்டிலிப்பாய், டிசெ. 14

காரைநகர் அரசினர் வைத்தியசாலை மருந்தாளர், மருந்துக் கலவையாளர் எவரும் இல்லாத நிலையில் செயற்பட்டு வருகின்றது. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். அம்பிகைபாகன் மேலிடத்தைக் கடித மூலம் கேட்டுள்ளார். (ஐ-135)

### ஆஸ்பத்திரிக்கு அலுமாரிகள்

திருநெல்வேலி, டிசெ. 14

யாழ். சுகாதாரத் திணைக்களம் யாழ். பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இரும்பு உருக்கினாலான அலுமாரிகளை விநியோகித்து வருகின்றது.

திணைக்கள நிதியிலிருந்து இதற்கென 60 அலுமாரிகள் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை —

அண்மையில் இப் பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு 110 மெத்தைகளும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-135)

### பயிற்சிகளை இங்கு நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 14

நேர் முகப்பரீட்சை மூலம் மருந்துக் கலவையாளர் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சிகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சம்பந்தப்பட்ட மாணவர்கள் சுகாதார அமைச்சின் செயலளரிடம் வேண்டுகோள் விடுக்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர். (ஐ-8)

### 2 வீடுகளுக்கு மட்டுமே மின் விநியோகம்

வலி. வடக்கு, டிசெ. 14

மல்லாகம் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளுக்கு மட்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-86)

### மிதிவெடி விழிப்புக் கருத்தரங்கு

கோப்பாய், டிசெ. 14

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் கோப்பாய் உதவி அரச அதிபர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மிதிவெடி பற்றிய விழிப்புக் கருத்தரங்கு நடைபெற்றது. (ஐ-72)

### சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்

கோப்பாய், டிசெ. 14

அச்செழு, புத்தூர் பிரதேசத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கப்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி யாழ். சமூக சேவைகள் மன்ற இணைப்பாளர் திருமதி ஆனந்தவேல் அச்செழு சனசமூக நிலையத்தில் வைத்து இக்கடனை வழங்கினார். (ஐ-72)

### மணிக்கோபுரம் அமைப்பு

சுன்னாகம், டிசெ. 14

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்துக்கு மணிக்கோபுரமொன்று அமைக்கப்பட்டு வருகிறது,

அத்துடன் வைரவர், முருகன் பரிவார மூர்த்திகளின் கோயில்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபைச் செயலாளர் செ. அன்னராசா தெரிவித்தார். (ஐ-27)

### புராணப்படிப்பு முடிவு

கொழும்புத்துறை, டிசெ. 14

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயிலில் கடந்த மாதம் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 'காசிகாண்ட புராணப்படிப்பு' ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை புராணப் படிப்பு பூர்த்திவிழா ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சு. சுந்தரேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

### சிரமதானப் பணி

கொழும்புத்துறை, டிசெ. 14

சரசாலை வடக்கு இளைஞர் கழகத்தின் ஆதரவில் சரசாலை நுணாவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தில் அண்மையில் ஆலய பரிபாலன சபையின் தலைவர் க. சிவசங்கரநாதன் தலைமையில் சிரமதானப் பணி இடம்பெற்றது. (ஐ-30)

### உரம் விலை உயர்வு

வலி. வடக்கு. டிசெ. 14

மழைபெய்து வயல்களில் வெள்ளம் தேங்கியுள்ளதைத் தொடர்ந்து உரம் போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கமத்தொழில் சேவை நிலையங்களில் போதியளவு உரம் இல்லாததால் வெளிச்சந்தையில் உரத்தின் விலை அதிகரித்துள்ளது. (ஐ-86)

### மாதாந்த உதவிப்பணம்

தென்மராட்சி, டிசெ. 14

தென்மராட்சி பிரதேசத்தில் மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முதன்முறையாக கணனி மூலம் தயாரிக்கப்பட்ட பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சிகள் தனித்தனியாக நிற்காது மக்களுடன் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும்

## தென்ஆபிரிக்கத் தமிழ் எம்.பி. அறிவுரை

யாழ்ப்பாணம், டிசெ. 14

இலங்கையில் தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை இல்லை. ஒவ்வொரு தமிழ்க் கட்சியும் தாம் முன்னுக்குவர வேண்டும் என்ற சுயநோக்கிலேயே செயற்பட்டு வருகின்றன. இந்நிலை மாறி தமிழ்க் கட்சிகள் தனித்தனியே நிற்காது, அனைத்தும் ஒன்றுபட்டு மக்களுடன் இணைந்து ஒரே குரலில் இனப்பிரச்சினை விவகாரத்துக்கு குரல் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு தென்ஆபிரிக்க நாடாளுமன்றக் குழுவைச் சேர்ந்த கேப்ரவுண் எம். பி. யான கே. ராஜூ யாழ். செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது பேசுகையில் கூறினார்.

யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இச் சந்திப்பின் போது தென்ஆபிரிக்க எம். பி. கே: ராஜூ மேலும் கூறியதாவது:–

தமிழ் மக்களும் தமிழ் அரசியற் கட்சிகளும் ஒன்றுபட்டு ஒரே குரலில் போராடினால் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய பதிலை அரசு சொல்லியே ஆகவேண்டும்.

பலமான சக்தியான தமிழ் மக்கள் ஒன்றுபட்டு தமிழ் அரசியற் கட்சிகளுடனும் இணைந்து ஒருமித்த குரலில் தமக்குள்ள பிரச்சினைகளை எடுத்துக்கூறவேண்டும். ஒன்றுபட்டு ஒரே குரலில் செயற்பட்டால் படையினரைக்கூட இங்கிருந்து திருப்பிப் பெறக்கூடியநிலை உருவாகலாம்— என்று அவர் கூறினார்.

இக்குழுவில் அங்கம் வகித்த மற்றொரு தென் ஆபிரிக்க எம்.பியான இ. ஏபிரகாம் பேசுகையில் கூறியதாவது:–

தமிழ் மக்களின் பிரச்சினைகளைக்கண்டறிய, அவற்றை உணர்ந்து கொள்ளவே இங்கு வந்தோம். யாழ்ப்பாணத்திலுள்ள பிரச்சினைகளை நேரில் கண்டோம். யாழ் மக்களுக்கு உள்ள பாதுகாப்புப் பிரச்சினைகளையும் நாம் நன்கு அறிகின்றோம்.

இங்கு பல பிரச்சினைகள் எடுத்துக் கூறப்பட்டன. மக்கள் தமக்குள்ள பிரச்சினைகளைக் கட்சிகளுக்கும் அரசுக்கும் எடுத்துச் சொல்லி அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். அழுத்தத்தின் தன்மை பற்றி நாம் நன்றாக உணர்ந்தவர்கள். எவ்வாறு அழுத்தம் கொடுப்பது என்பது உங்களுக்குத் தெரியாததல்ல.

எமது நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் பல ஆண்டுகளாக இருந்து வந்தன. அவற்றை சில ஆண்டுகளுக்கு முன்னர் சுலபமாகத் தீர்த்துக்கொண்டோம், தற்போது எமது நாட்டில் எவ்விதபிரச்சினைகளும் இல்லை. எல்லாமே சுமுகமாக உள்ளன — என்று அவர் சொன்னார்.

(அ-173)

## வாசகர் திருமுகம்

### கல்வித்துறையில் அடிக்கடி பரீட்சார்த்தம் தேவையா?

காலத்துக்குக்காலம் அரசாங்கங்கள் தாம் பதவிக்கு வந்ததும் முதலில் கை வைப்பது கல்வியிலேயே ஆகும். கல்வித்துறை தான் ''சீர்திருத்தம் - பரீட்சார்த்தம்'' என்ற பெயரில்தாம் தாம் கண்டு கேட்டவற்றையும், நாட்டுப்பற்றில்லாத குறுகிய இலக்குகளையும் ''சோதனை செய்து பார்க்கும் களம்'' என்று எண்ணுவது மறுக்க இயலாத உண்மை என்பதுடன் கவலை தருவதொன்றுமாகும்.

எழுபதுகளில் ஜி. சீ. ஈ. சாதாரணதரத்துக்குப் பதிலாக என். சீ. ஜி. ஈ. என்றொரு முறை அறிமுகம் செய்யப்பட்டது. அதுவே, 'தொழில் முன்னிலைப் பாடங்கள்' ஆகும். பின்னர் அவை கைவிடப்பட்டன. மீண்டும் ஜி. சீ. ஈ சாதாரணதரம் நடைமுறைக்கு வந்தது. அதில் ஒப்படை என்பது அறிமுகப்படுத்தப்பட்டு அதுவும் கைவிடப்பட்டது. புவியியல், சரித்திரம் என்னும் பாடங்களை இணைத்துச் சமூகக்கல்வி என்பது அறிமுகம் செய்யப்பட்டதால் புவியியல், சரித்திரம் பற்றிய விரிவான அறிவு மாணவர்களிடையே அற்றுப்போனது. இப்போது வரலாறு என்ற பெயருடன் சரித்திரம் கற்பிக்கப்படுகிறது. புவியியல் பற்றிய விரிவான அறிவு இன்னமும் சமூகக்கல்விக்குள் முடக்கப்பட்டு இருக்கின்றது. எனினும் இன்றும் சரித்திரம், புவியியல் என்பவை பட்டப்படிப்பிற்குரிய பாடங்களாகவே உள்ளன.

இப்போது பச்சை, சிவப்பு, மஞ்சள் முதலான நிறம் தீட்டி மாணவர்கள் பற்றிக் கணிப்பீடு செய்யும் முறைமை தொடங்கப்பட்டுள்ளது. நிறங்களைத் தீட்டிப் பிள்ளை பெற்ற புள்ளிகள் எத்தனை என்று பெற்றோரை மயங்க வைக்காது, முன்னரைப் போலவே பிள்ளைகள் பரீட்சைகளில் பெறும் புள்ளிகளை நேரடியாகவே அறிவிப்பதுதான் உத்தமமானதும் நன்மை தருவதுமாகும் என்பது எனது கருத்தாகும். நேற்று வந்து, இன்று இருந்து நாளை போகும் இந்தப் 'பரீட்சார்த்த மதிப்பீடுகளை'' மூட்டை கட்டி வைத்துவிட்டு, சமுதாயத்துக்கு நன்மை தரும் வகையில் இந்தக் கணிப்பீடுகள் செய்வதற்கு ஆசிரியர்கள் செலவு செய்யும் நேரத்தை கற்பிப்பதிலேயே செலவழிக்கலாமல்லவா?

பாடசாலைகள் இரு நேரமும் நடைபெறுவதனையும் அனுமதிக்காது, விரும்பாது, பாடசாலை நடைபெறும் அரை நாளிலும் கணிப்பீடு, மதிப்பீடுகளில் அதிக நேரத்தைச் செலவு செய்வதால் கல்வித் துறையில் வளர்ச்சி காணமுடியாது.

சில பாடசாலைகளில் மாதாந்தம் நடைபெறும் பரீட்சைகளைப் போன்று அனைத்துப் பாடசாலைகளிலும் நடத்துவதே போதுமானது. ஒவ்வொரு பாடத்தின் முடிவுகளிலும் பரீட்சை அவசியமா?

எது எவ்வாறெனினும் கல்வி வளர்ச்சி பற்றிப் பலரும் பலவாறாகப் பேசினாலும் இன்றைய மாணவர்களின் கட்டுரை எழுதும் வன்மை உட்படப் பல திறமைகளில் வளர்ச்சியின்மையே காணப்படுகின்றது என்பதுவே கசப்பான உண்மை.

மேலும் ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சைகளின் பெறுபேறு அறிவிக்கும் போது ஏ, பி, சி என்று தரப்படுத்துதல் அவசியமற்றது. இந்தத் தரப்படுத்தல் பின்னர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தேவைப்படுவதில்லை. புள்ளிகள் தான் எந்நாளும் வேண்டப்படுகின்றவை. இந்தத் தரப்படுத்தலால் மாணவர்கள் தாம் பெற்ற புள்ளிகள் பற்றி அறியாது தத்தளிப்பதும், புள்ளிகள் அறிவிக்கும் வரை கற்பனையில் போராடுவதுடன் காத்திருப்பதும் அவசியமற்றது. எனவே உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளை பெறுபேறு வெளியிடும் போதே அறிவிப்பதும் வரவேற்கத்தக்கது என்பதும் எனது கருத்தாகும்.

இந்நாட்டின் எதிர்கால மன்னர்களான மாணவர்களின் நலன்கருதி —

கல்வித்துறையில் அடிக்கடி ''பரீட்சார்த்தங்களை'' நடத்துவதையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும், பெற்றோரையும் குழப்புவதையும் கல்வி உலகம் தவிர்க்க வேண்டும்.

**எஸ். முருகையா**

சாவகச்சேரி.

### பிரபாவின் சமாதான அழைப்பு

# அரசு தனது நிலைப்பாட்டை வெளியிடாமல் இருப்பது ஏன்?

## தேசிய சமாதானப் பேரவை கவலை

கொழும்பு, டிசெ. 14

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார். எனவே மேலும் கால தாமதம் செய்யாது இது தொடர்பான தனது நிலைப்பாட்டை சாதகமான முறையில் அரசாங்கம் தெரிவிக்கவேண்டும்.

தேசிய சமாதானப் பேரவையின் வெகுஜனத் தொடர்புப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாவீரர் தின உரையில் வே. பிரபாகரன் தனது கருத்துக்களைத் தெரிவித்து இரண்டு வாரங்கள் கடந்துவிட்டபோதும் அரசாங்கம் அது தொடர்பான உறுதியான பதில் எதனையும் இதுவரை வெளியிடவில்லை.

பேச்சு வார்த்தைக்கான கதவுகள் மூடப்படவில்லையெனவும் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசுடன் பேச்சுவர்த்தை நடத்த முடியுமெனவும் வே. பிரபாகரன் தெரிவித்திருப்பது அரசாங்கத்துக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகத் தெரிகிறது

இந்த அறிவிப்பு வெளிவருவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தூதுக்குழுவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்திருந்தார்.—

நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான சூழ்நிலையை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உருவாக்க வேண்டும்.

வடக்குக் கிழக்கில் நடைமுறையில் உள்ள பொருளாதாரத் தடைகளை அரசாங்கம் நீக்க வேண்டும். அத்துடன் 'பாஸ்' வழங்கும் நடைமுறையையும் தளர்த்த வேண்டும். கண்மூடித்தனமான ஷெல் வீச்சுக்களையும் நிறுத்த வேண்டும். அதே சமயம் குடிமக்களின் இலக்குகள் மீது தாக்குதல்கள் நடத்துவதை விடுதலைப் புலிகள் நிறுத்த வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான அடிப்படை அம்சங்களில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கருத்தொற்றுமைப்பாட்டை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.

ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி புலிகள் இயக்கம் ஓர் அமைப்பு என்ற அந்தஸ்தைப் பெறுவதற்கான அங்கீகாரத்தை வழங்குவது தேவையானதாகும்.

தேசிய மட்டத்திலான குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு சமாதான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும், அக் குழுவில் தகுதி வாய்ந்தோர் அங்கம் வகிக்கலாம்

அத்துடன் சமாதான நடவடிக்கைகளுக்கு உள ரீதியாக உதவும் வகையிலான அறிக்கைகள் பெரிதும் உதவும்.

சமாதானத் தீர்வுக்கு இதய சுத்தியுடன் கூடிய நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்குறிப்பிட்டவைகள் இன்றியமையாதவையாகும்,

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6-10)

### ஊனமுற்றோர் தின விழா

வடக்கு—கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பளை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊனமுற்றோர் தின விழா கடந்த வியாழக்கிழமை பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்றது.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு புனரமைப்பு அதிகாரசபை இணைப்பாளர் எஸ். குகராஜனும், சிறப்பு விருந்தினராக பளை வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபானும் கலந்து சொண்டனர்.

விழா முடிவில் ஊனமுற்றோரின் விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ஐ-117)

### குழந்தை யேசு வழிபாடு

கொழும்புத்துறை டிசெ. 14

யாழ். கோயில் வீதியிலுள்ள அருள் ஆச்சிரமத்தில் பிரதி திங்கட்கிழமை தோறும் குழந்தை யேசு வழிபாடு நடைபெற்று வருகின்றது. இதற்கெனக் கொழும்பிலிருந்து விசேட சொரூபம் ஒன்று வரவழைக்கப்பட்டுள்ளது. பாசையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றலிலும் குழந்தை யேசு வழிபாடு நடைபெற்று வருகின்றது.

(ஐ-30)

### கலந்துரையாடல்

பருத்தித்துறை, கரவெட்டி மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விவாக, இறப்பு, பிறப்புப் பதிவாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை மேலதிக மாவட்ட காணிப்பதிவாளர் பணிமனையில் நடைபெறும்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

1998 புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வன் இ. இமயகரன்

உட்பட ஏனைய மாணவர்களும் சித்தியெய்த உறுதுணையாக நின்ற யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவ்வாசிரியர்களுக்கு விழா எடுத்த பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றுக்கும் எமது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ப. இராசேந்திரம்

ஊரெழு கிழக்கு.

(61310)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

## அரசினர்
## பொது வைத்தியசாலை

### 1999 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் நிறுவனங்களும் மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள விண்ணப்பிக்கலாம்.

1 ) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2 ) கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள்
3 ) கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
4 ) பாடசாலை அபிவிருந்திச் சங்கங்கள்
5 ) '' சமூர்த்தி '' முகாமையாளர்கள்
6 ) உரிய அதிகாரிகளல் அங்கீகரிக்கப்பட்ட கமக்காரர் ஸ்தாபனங்கள்

**(அ) பொருள்கள்**

அ) 01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
அ) 02. ஈர்க்கில் தடி, தும்புத் தடி, பாய்
அ) 03. பாவனைப் பொருள்கள் ( சவர்க்காரம், தீப்பெட்டி, விம், கார்ப்பிக், சவர அலகு முதலியன )
அ) 04. துணி வகைகள் — வைத்தியசாலைப் பாவனைக்குரியவை ( சீருடைத் துணி, கோடிட்ட துணி, படுக்கை விரிப்பு, துவாய் முதலியன)
அ) 05. மரத் தளபாடங்கள் — வைத்தியசாலைப் பாவனைக்குரியவை ( கட்டில்கள், மேசைகள், கதிரைகள், வாங்குகள் முதலியன
அ) 06. உருக்குத் தளபாடங்கள் — வைத்தியசாலைப் பாவனைக்குரியவை ( அலுமாரிகள், கட்டில்கள், சேலையின் நிலைகள் முதலியன )
அ) 07. கட்டடப் பொருள்கள் ( சீமெந்து, பெயின்ற், ஆணிகள், கல், மணல் முதலியன )
அ) 08. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் (டயர், ரியூப், பற்றரிகள் முதலியன உட்பட )
அ) 09. அரிந்த பனை மரங்கள், சலாகைகள், அரிந்த ஏனைய மரங்கள் (நிலைகள், யன்னல், கதவு, உள் சீற் பொருத்துவதற்குரிய மரங்கள் முதலியன)
அ) 10. நீர் வழங்கும் பொருள்கள் (பி.வி.சி. குழாய்கள் முதலியன )
அ) 11. ஏனைய பாவனைப் பொருள்கள் ( பிளாஸ்ரிக் வாளி, குப்பைக் கூடை, சுவர் மணிக்கூடு முதலியன )
அ) 12. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருள்கள ( பூட்டுகள், வாளி, மண்வெட்டி, முதலியன )
அ) 13. சப்பாத்துக்கள், றப்பர் செருப்புகள்
அ) 14 றெக்சின், பொலித்தீன் வகைகள்
அ) 15. மின்சார உபகரணங்கள், மின்சார உதிரிப் பாகங்கள் ( வயர், மின்குமிழ்கள், கோல்டர் பிளக் முதலியன )
அ) 16. இறப்பர் முத்திரைகள்
அ) 17. மருந்து வகைகள்
அ) 18. மெத்தைகள் (சியெஸ்டா) தலையணைகள், நுளம்பு வலைகள் முதலியன
அ) 19. அலுமினியப் பாத்திரங்கள் ( சமையலறைக்குரிய பெரிய பாத்திரங்கள் உட்பட )

**(ஆ) சேவைகள்**

ஆ) 01. உருக்குத் தளபாடம் திருத்தம்
ஆ) 02. மரத் தளபாடத் திருத்தம்
ஆ) 03. மின்சார இயந்திரங்கள், மின்சார உபகரணத் திருத்தம் ( குளிர்சாதனப் பெட்டிகள், தொற்று நீக்கி இயந்திரம், எக்ஸ் — கதிர் இயந்திரம், மோட்டார்கள், மின் பிறப்பாக்கிகள் உட்பட )
ஆ) 04. கட்டடத் திருத்தம்
ஆ) 05. அச்சு வேலைகள் ( படிவங்கள் முதலியன )
ஆ) 06. நீரிறைக்கும் இயந்திரம், கழிவு அகற்றும் இயந்திரம் திருத்தம்
ஆ) 07. நீர் விநியோக, மலசலகூட வடிகால் திருத்தம்
ஆ) 08. போக்குவரத்துச் சேவை ( பொருள்கள் ஏற்றி இறக்கல் )
ஆ) 09. மோட்டார் வாகனத் திருத்தம் ( சேவிஸ் உட்பட )
ஆ) 10. தட்டச்சு இயந்திரம், பிரதியெடுக்கும் இயந்திரம் ( றோனியோ ) நிழற் பிரதி எடுக்கும் இயந்திரம், தையல் இயந்திரம் முதலியவற்றின் திருத்தம் ( சேவிஸ் உட்பட )
ஆ) 11. அடையாள அட்டைகள் ( புகைப்படம் எடுத்துத் தயாரித்து வழங்குதல் )

மேற்படி சேவைகளுக்காகப் பதிவுசெய்து கொள்ள விரும்புவோர், உரிய விண்ணப்பப்படிவத்தை எனது பணிமனையில் ரூபா 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 1998 - 12 - 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வைத்திய கலாநிதி**
**செல்வி நவமலர் கனகரத்தினம்**
**பணிப்பாளர்.**

11 - 12 - 98

(சி/5785)

# தமிழ் தேசிய இனத்தின் ஏகோபித்த பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே!

## குமார் பொன்னம்பலம் பேட்டி

மணிலா, டிசெ. 14

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் நிலைத்துநின்று போராடிக் கொண்டு தமிழர்களின் அபிலாஷைகளை முன்னெடுத்துச் செல்லும் ஒரே இயக்கம் விடுதலைப் புலிகள் மட்டுமே. எனவே அவர்கள் மட்டும் தான் தமிழ் தேசிய இனத்தின் ஏகோபித்த பிரதிநிதிகள் என்பதை நான்பகிரங்கமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் வெரித்தாஸ் வானொலிக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது—

மூன்று காரணங்களுக்காக நான் புலிகள் இயக்கத்தை தமிழ்தேசிய இனத்தின்ஏகோபித்த பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்கிறேன்.

ஒன்று, இன்று தமிழர்களுக்காக குரல் கொடுப்பதற்கு தமிழ் பிரதிநிதிகள் என்று— தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்று— எவருமே இல்லை. நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழர்கள் குறிப்பாக வடக்கு — கிழக்கில் இருந்து வந்த தமிழர்கள் இன்று சரணாகதி அடைந்து சிங்கள அரசிடம் கால்களை மண்டியிட்டுக் கொண்டு நக்கின்றார்கள்.

இரண்டாவது இன்று புலிகள் இயக்கம் மட்டுமே தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய இடத்தில் நிலைத்து நின்று போராடுகிறது.

மூன்றாவது இன்று தமிழ் தேசிய இனத்தின் அபிலாசைகளை சரியோ பிழையோ தமக்கு தெரிந்த விதத்தில் முன்னெடுத்துக் கொண்டு செல்வது புலிகள் இயக்கம் மட்டுமே என்பதை அனைவரும் உணரவேண்டும்.

எனவே இந்த மூன்று காரணங்களுக்காகவே தமிழ்த் தேசிய இனத்தின் ஏகோபித்த பிரதிநிதிகள் புலிகள் இயக்கம் மட்டுந்தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மனித உரிமை மீறல்**

தமிழ் பிரதேசங்களுக்கு அச்சு உணவு, மருந்துப் பொருள்களை அனுப்ப மறுக்கின்ற செயல் ஒரு மனித உரிமை மீறல் ஆகும்.

ஆனால் இது சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது எனக்கு தெளிவாக தெரியாது.

எனினும் இது விடயமாக அரசுக்கு எதிராகச் செயற்படுவது என்றால் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக சொல்லிக் கொள்பவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக இந்த விடயத்தில் நிலைத்து நிற்க வேண்டும்.

புலம் பெயர்ந்து வசிக்கின்ற தமிழ் மக்கள் இலங்கையில் அநியாயம் செய்யப்படுகின்றது என்பதை மட்டுமன்றி ஜனாதிபதி தென் ஆபிரிக்காவில் தெரிவித்த கருத்துக்களையும் பின்னர் அதனை மறுத்த கருத்துக்களையும் கொண்ட கைசற்றைப் பயன்படுத்தி பிரசாரமும் செய்ய வேண்டும்.

இதன் மூலம் அரசின்பொய் முகத்தை வெளிப்படுத்தமுடியும்,

உணவு, மருந்து ஆகியவற்றை அனுப்ப வேண்டுமென இலங்கை அரசைஅந்த நாடுகள் கேட்டால் அதுவே ஒரு பெரிய விடயம் ஆகும்.

**தமிழர்கள் வந்தேறு குடிகளா?**

தமிழர்கள் இலங்கையில் பூர்வீகக் குடிகள் என்பது சிங்கள சரித்திர ஆராய்ச்சியாளர்களால் கூட திட்டவட்டமாக சொல்லப்பட்ட ஒன்று.

சிங்களவர்களை விட தமிழர்களே பூர்வீகக் குடிகளாக இருந்தார்கள் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி தென் ஆபிரிக்காவில் ஏன் இப்படி ஒரு கருத்தைச் சொன்னார் என்று தெரியவில்லை.

''அவர்கள் கேட்டார்கள் நான் வாய் தவறிச் சொல்லிவிட்டேன்'' என்று ஜனாதிபதி தம்மைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் தம்மைச் சந்தித்த ஈ.பி.டி.பி. கட்சியினருக்கு ''நான் கூறியது உண்மைதானே நான் இதற்கு முன்னர் கூட இப்படிக் கூறியிருக்கின்றேனே'' என்று சொல்லி இருக்கின்றார்.

ஆகையால் ஒரு நாளில் ஒரு மணித்தியாலத்துக்கு இடையில் ஜனாதிபதி இரண்டு விதமாகக் கூறியுள்ளார். எனவே இதனை அம்பலப்படுத்த அந்தத் தமிழ் உறுப்பினர்கள் முன்வரவேண்டும். அவர்கள் இதனைச் செய்யாது விட்டால் அது அவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாக அமையும்.

இப்படி குமார் பொன்னம்பலம் கூறினார்.

ஜனாதிபதியின் கருத்துக்கு எதிராக நீங்கள் வெளியிட்ட கருத்துக்கள் காரணமாக அரசு கடுங்கோபம் கொண்டுள்ளதால் நீங்கள் நாட்டை விட்டு வெளியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக நீங்கள் சொல்கின்ற பதில் என்ன? என்று அவரிடம் கேட்கப்பட்டபோது—

''நான் மலேஷியாவில் தற்போது இருக்கின்றேன். நான் இங்கு வரவேண்டியது மூன்று, நான்கு மாதங்களின் முன்பு தீர்மானிக்கப்பட்ட ஒன்று. இது மேல் நீதிமன்ற நீதிபதிகள் உட்படப் பலருக்குத் தெரியும். எனது கடவுச்சீட்டு, விமானச்சீட்டு என்பவை கூட முன்னதாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன. நான் புலிகள் இயக்கத்துக்கு அரசியல் ரீதியாக ஆதரவளிப்பதாகக் கூறிக்கொண்டு ஒளிந்துகொண்டு எனதுவாழ்க்கையை நடத்தமாட்டேன்.

சிங்கள மக்களுக்கு சொல்ல வேண்டிய விடயத்தைச் சொல்லிவிட்டேன். அவர்கள் இப்போது கொந்தளித்துக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையை அரசு சாதகமாக பயன்படுத்தி தென்ஆபிரிக்காவில் சொன்ன விடயத்தை மழுப்பப்பார்க்கின்றது. அத்துடன் எனக்கு எதிராக ஒரு பிரசாரத்தை உருவாக்கப் பார்க்கின்றது. இது செல்லுபடியாகாத ஒரு விடயம்.

கடவுள் ஒருவன் இருக்கின்றான். நான் எதற்குப் பயப்படவேண்டும்? புலிகளை நான் ஆதரித்துக் கொண்டிருக்கும் போது அரசியல் ரீதியாக ஏன் பயப்பட வேண்டும்?

இப்படிக் கூறினார்.

(இ-9)

## கிராமிய மட்டத்துக்கு விஸ்தரிப்பு

மூளாய், டிசெ. 14

யாழ் மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் தனது நடவடிக்கைகளை கிராமிய மட்டத்துக்கு விஸ்தரிக்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக குடாநாடு முழுவதும் கிராம ரீதியாக வதிவிட அங்கத்தவர்களை நியமிப்பதற்குரிய நடவடிக்கைகளை அது மேற்கொண்டு வருகிறது.

குடாநாடு முழுவதும் சுமார் 450 வதிவிட அங்கத்தவர்கள் இணைக்கப்பட்டு இவர்களுக்கு பயிற்சி வழங்கி தனது நிறுவன நடவடிக்கைகளை கிராமிய மட்டத்துக்கு விஸ்தரிப்பதற்கு இந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(இ-99)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**நவமணி தம்பாபிள்ளை**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

மலர்வு **17—05—1930**        உதிர்வு **30—11—1994**

திதி: 14 - 12 - 1998

நான்காண்டுகள் சென்றால் என்ன
எங்கள் நெஞ்சங்களில் உங்கள்
நினைவுகள் என்றும் நிலைத்து நிற்கும்.

**கணவன், பிள்ளைகள், மருமகன்.**

கல்வளை,
சண்டிலிப்பாய்.

(61224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது
யாழ்ப்பாணத்திலும்


CEDRIC

மண்ணெண்ணெய் கேஸ் குகர்

* சிலிண்டர் தேவையில்லை
* கேஸைப் போன்ற நீலச்சுவாலையுடன் எரியக்கூடியது.
* மணம் இல்லை. கரிபிடிக்காது. காற்று அழுத்தம் தேவையில்லை.

3500/= மட்டுமே
தொலைபேசி இல. 323223
98, Braybrook Place, Colombo 02.
தலைமை அலுவலகம்
172, Kensington Church Street, Kensington, London, W8 BN
Tel: 0171792 1881 (10 Lines) Fax: 0171 243 8034





ஏஜண்டுகள் தேவை

(சி/5766)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 | 14 |
| 01 | 11 |
| 1942 | 1998 |

அமரர்

## முத்தையா மதிபூசணன்

(மெடேர்ன் பார்மஸி முன்னாள் உரிமையாளர்,
சங்கானை)

அன்புத் தெய்வமே! காலமெல்லாம்
எமக்கென வாழ்ந்து இடைவிடாது
இறைவனை வழிபட்டு எல்லோருடனும்
அன்பாக கதைத்த உங்கள் குரல்
ஓய்ந்து 31 நாள்கள் ... ...

எம் இனிய தெய்வம் நீங்கள் ஏங்கவிட்டு
சென்றதேனோ, காலமெல்லாம் துணையாவீர்
என்றே தான் சனவு கண்டோம்! கனவெல்லாம்
கானல் நீராய் போனதன் மர்மமென்ன?
கண்ணிலே அருவியாய் நீர்பாய வாழ்த்துகின்றோம்.
உம் நினைவில் உம் திருநாமத்தை உள்ளம்
உள்ளவரை மறவோம்!

தங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

மனைவி, மகன்.

குளத்தடி வீதி,
சங்கானை.

(61292)

பழைய புதிய வாடிக்கையாளர்களுக்கு

## T. V. அன்ரனா

தற்சமயம் ரூபவாஹினி நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு U. H. F. அன்ரனாக்களை மாற்ற வேண்டி இருப்பதால் எம்மால் பொருத்தப்பட்ட அன்ரனாக்களோடு U. H. F. அன்ரனாக்களையும் U. H. F., V. H. F. பூஸ்ரர்களையும் குறைந்த செலவில் பொருத்திட எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**சகல அன்ரனாக்களும் பொருத்தித் தரப்படும்**

ரி. வி, றேடியோ, டெக், மணிக்கூடுகள் என்பவற்றைத் திருத்தவும் வாங்கிக் கொள்ளவும் நாடுங்கள்:

(சகல SONY, NATIONAL T. V. க்கள்
2060, 2072, 2032 போன்றவை)

## வீனஸ் டெல்கா

கிளை: 140, K. K. S. வீதி, (சத்திரத்துச் சந்தி)
யாழ்ப்பாணம்.

தலைமையகம்:
284, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(நாகவிகாரை முன்பாக)

TEL. 2064

(சி/5740)

## ஆங்கில வகுப்பு

மதன்மராட்சி டிசெ. 14
சாவகச்சேரி நகர மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் ஜனவரி இரண்டாம் திகதி முதல் சனி, ஞாயிறு தினங்களில் குறைந்த கட்டணத்தில் ஆங்கில வகுப்பு ஆரம்பிக்கவுள்ளனர்,

(இ-117)

## பாடசாலையில் திருட்டு

வலி. கிழக்கு, டிசெ. 14
கோப்பாய் மகா வித்தியாலயத்தின் கட்டடக் கூரையைப் பிரித்து உள்சென்ற திருடர்கள் பொருள்கள் பலவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

பாடசாலையின் அதிபர் அலுவலகம், மனையியல் அறை, களஞ்சிய அறை, ஆய்வுகூட அறை என்பனவற்றிலேயே பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

சமயற்பாத்திரங்கள், தளபாட உபகரணப் பொருள்கள், கட்டட உபகரணப் பொருள்கள், ஆய்வுகூடத்தினுள் இருந்த முக்கியமான உபகரணங்கள் என்பனவும் திருடர்களால் களவாடப்பட்டுள்ளன.

இதேவேளை பாடசாலைக் கட்டடத்தில் இருந்த சகல முகட்டு ஓடுகளும் திருடப்பட்டுள்ளன.

(இ-80)

## கடன் நிறுத்தம்

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்டு வரும் வீடமைப்புக் கடன்களில் இவ்வாண்டுக்கான புதிய சடனுக்கான ஆரம்பக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண தேசிய வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

புதிய கடன்களைப்பெற விண்ணப்பித்தவர்களுக்கான ஆரம்பக்கொடுப்பனவு 1999 பெப்ருவரி மாதமளவிலேயே இடம்பெறவுள்ளதாக யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது.

(இ-51)

## ஒட்டுசுட்டானில் இரு புலிகள் உயிரிழப்பு

வவுனியா டிசெ. 14
ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்று விடுதலைப்புலிகள் வன்னியில் அறிவித்துள்ளனர் என்று வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தோர் விவரம் வருமாறு:

★ நாகேஸ்வரி (வைரவநாதன் ஜெயமதி — யாழ்ப்பாணம்.)

★ ரேணுகா (அருமைத்துரை நவநிதா — யாழ்ப்பாணம்.)

(இ-7)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121,
2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T. P. 24453

(60914)

சிவமயம்

# காரைநகர் சிவன்கோயில் திருப்பணிச் சபை அறிவித்தல்

**சிவநேயர்களே!**

காரைநகர் சிவன்கோயில் ஐயனார், சிவன் இராஜ கோபுர கும்பாபிஷேகமும் கோயில் மகாகும்பாபிஷேகமும் 07-06-1998 ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெற்றது யாவரும் அறிந்ததே.

மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து நித்திய பூசையுடன் தொடர்புடைய நித்தியபடி மேளம், பூ, பூ மாலை, கோயிலும் வீதிகளும் தினமும் சுத்தம் செய்தல், பூந்தோட்டம் சீரமைத்தல், இரவுக்காவல் போன்ற பணிகளுக்கான செலவினங்களை திருப்பணிச் சபை கொடுத்து வருகின்றது.

மேலும் ஐயனார், அம்மன் தேர்கள் புதிதாக அமைக்கும் வேலையும் பிள்ளையார், நடேசர் தேர்கள் புனரமைக்கும் வேலையும் மாணிக்கவாசகர் மடாலயம் முழு அளவில் புனரமைக்கும் வேலைகளும் தேர்முட்டி, தேர் ஓடும் வீதி செப்பனிடல் போன்ற வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

காரைநகர் சிவன்கோயில் புனரமைப்புக்கென வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை தற்சமயம் விடுவித்துள்ள (Released) பத்து இலட்சம் ரூபாவினை (1,000,000/-) யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கியுள்ளார்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள நிதியினையும் திருப்பணிச் சபையின் நிதியினையும் கொண்டு மேற்படி திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

எமது சபையின் 1998 ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கை வருடம் முடிவடைந்த பின்னர் எண்பார்வை செய்யப்பட்டு வெளியிடப்படும். இக்கணக்கறிக்கையில் மகா கும்பாபிஷேகத்திற்கான வரவு செலவு விவரங்களும் இடம்பெறுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

வே. செல்வநாயகம்,
செயலாளர்,
காரைநகர் சிவன் கோயில் திருப்பணிச்சபை.

ஆ. அம்பலவிமுருகன்,
மு. சுந்தரலிங்கம்,
ஆதீனகர்த்தாக்கள்,
காரைநகர் சிவன் கோயில்

(61283)

# வாழ்த்துகின்றோம்

யா/விக்ரோறியாக் கல்லூரியில் கடந்த ஏழு ஆண்டுகளாக சிறப்புற அதிபராகக் கடமையாற்றிய

## திரு. கா. சந்திரபாலன்

அவர்கள்

வலயம் இரண்டின்
உதவிக் கல்விப் பணிப்பாளராக
[கல்வி நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி]
பதவியுயர்வைப் பெற்றுச் செல்வதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்.

(61290)

# ஓராண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 24 | 25 |
| 10 | 12 |
| 1927 | 1997 |

## சண்முகம் இராசையா

(கொல்லங்கலட்டி)

திதி: 14 – 12 – 1998

எங்கள் பாசமிகு தந்தையே!
எம்மை பாரினில் தவிக்கவிட்டு
பறந்துசென்று ஓராண்டு ஆனதப்பா!
மாதங்கள் பன்னிரண்டு மறைந்தாலும்
மறைந்திடுமா உம் உருவம்
உம்மக்கள் மகிழ்வுடன் வாழ
உவகை கொண்டீர் அப்பா
நின் நினைவுகளை நெஞ்சினில் சுமந்து
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்!

உம் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்.

235, பழைய வீதி,
கோப்பாய்.

(61200)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 DEC 199

# உதயன்

## ஆக்கபூர்வமான ஆலோசனை

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வீசிய பந்தை அரசாங்கம் இன்னும் கையில் எடுத்துக்கொள்ளவில்லை. அதற்குத் தயக்கம் காட்டி வருகின்றது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது; அரசியல் தீர்வே தேவை; அதுவே இறுதியானது என்று அரசு வெகு ''கச்சிதமாக'' அவ்வப்போது சொல்லிக் கொள்கிறது. ஆனால் இராணுவ நடவடிக்கைகளை மதக் கணக்காகத் தொடர்கின்றது, புதிய தாக்குதல்களைத் தொடங்குகிறது.

இராணுவத் தீர்வு வழியில் அரசுக்குள்ள நாட்டம் சமாதானவழியில் இல்லை. விடுதலைப் புலிகளை நம்ப முடியாது என்ற சீட்டைப் போட்டுக்கொண்டு. இராணுவ ரீதியில் தான் மேலோங்கும் வரை, போரைத் தொடர்வதே அரசின் இலக்கு என்பது நன்றாக விளங்குகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே போர் நடத்தப்படுகிறது என்று அரசாங்கம் கூறினாலும், உண்மையில் அது தமிழ் மக்களுக்கு எதிரானது என்பதே தள நிலைமை. போரினால் மிகமிகப் பெரிய அளவில் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மக்களே; விடுதலைப்புலிகளை விட. இது வெளியரங்கமானது.

விடுதலைப் புலிகள் தமிழர்களின் உரிமைப் போராட்ட வீரர்கள் அல்லர், பயங்கரவாதிகள் என்று வெளிநாடுகளை நம்பவைக்கும் திட்டத்தை பிரசாரம் செய்வதனால் உண்மை நிலையை மறைத்துவிடவும் அரசு முயல்கிறது.

எனினும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் அந்தப் பிரசாரத்தை இலகுவில் நம்புவதாக இல்லை, அதனால் அவை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேசி இனப்பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்து வைப்பதே உகந்த வழி என்று கருதுகின்றன.

இலங்கையில் சமாதானம் உண்டாகுவதற்கு அரசும் புலிகளும் பேச வேண்டும் என்ற நிலைப்பாட்டை யாழ்ப்பாணம் வந்து திரும்பிய தென்னாபிரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தெரிவித்தமைக்கும் மேற்கூறிய கருத்தே காரணம்.

இரு தரப்பாரும் தாம் விரும்பிய சிறிய நாட்டில் பேசவேண்டும். அந்தப் பேச்சுக்கு உதவ நாம் தயார்- என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆக்கபூர்வமான ஆலோசனை இது. தமக்குள் இருந்த பிணக்கைத் தீர்ப்பதில் நிறைய அனுபவம் பெற்றவர்களின் உதவி கிடைக்கும் வாய்ப்பு உண்டாகியுள்ளது.

அமெரிக்கா, அது இது, என்று பெரிய நாடுகளின் பொறிக்குள் விழாமல், சுயலாபம் விரும்பும் நாடுகளை அணைத்துக் கொள்ளாமல் ஆரவாரமின்றி அடக்கமாகத் தீர்வு காண இந்த யோசனை பெரிதும் உதவும். அரசு இதனை நழுவ விடாது சிக்கெனப் பற்றிக் கொள்ளட்டும்! மனம் மாறுமா அது?

# மூளைசாலிகள் வெளியேறுவதால் தமிழ்ப் பகுதிக்கு பெரும் தாக்கம்

ஜி. எம். செபஸ்ரியாம்பிள்ளை
யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையினரின் வெளியீடான ''காலசுரபி' சஞ்சிகையின் முதலாவது இதழில் வெளியான ''தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து மூளைசாலிகள் வெளியேற்றமும் சமூக, பொருளாதாரத் தாக்கமும'' என்ற கட்டுரை சமகாலப் பிரச்சினையைத் தெளிவாக விளக்குகிறது

வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டும் வண்ணம் பிரசுரமாகும் இக்கட்டுரையை, யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியல், சமூகவியல்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஜீ. எம். செபஸ்ரியாம்பிள்ளை எழுதியுள்ளார்.

இக்கட்டுரை இரண்டு பகுதிகளாக உதயனில் வெளிவருகிறது.

மூளைசாலிகள் வெளியேற்றம் என்பது ஆழ்ந்த விமர்சனத்துக்குரிய ஓர் எண்ணக்கருவாகும். ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகின்ற Brain Drain என்ற எண்ணக்கருவை மூளைசாலிகள் வெளியேற்றம் என்ற தொடர் தெளிவாகச் சுட்டிக்காட்டவில்லை என்ற தவறு ஒருபுறமிருக்க, மறுபுறம் ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகின்ற Brain Drain என்ற எண்ணக்கருவும் மீள்பார்வைக்குரிய ஒரு விஷயமாகும். உலகத்தை ஒரு முழுக் கூறாகக் கொள்வோமாயின் மூளைசாலிகள் வெளியேற்றம் என்

## பகுதி 1

பது ஓர் அர்த்தமற்ற கருத்தாகி விடலாம். இந்நிலையில் ஒரு நாட்டின் ஆள்புல எல்லை. மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடு, அபிவிருத்தி அடையும் நாடு என்பவற்றை அடிப்படையாக வைத்தே இப்பிரச்சினை நோக்கப்பட வேண்டும்.

பண்டைக் காலத்திலிருந்தே அறிஞர்கள் நாட்டுக்கு நாடு புலம்பெயர்ந்து உள்ளனர். சிறப்பாக சமய ஞானிகளுக்கும், தத்துவ ஞானிகளுக்கும் நாட்டின் எல்லைகள் தடையாக இருக்கவில்லை. எல்லா நாடுகளையும், மக்களையும் ஒன்றாகவே கருதினார்கள். ஒரு நாடு இன்னொரு நாட்டை அடிமைப்படுத்துகின்ற நிலை தொடங்க, இனமேலாதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியது. ஆற்றல் உள்ளோர் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு இடம் பெயர்தல் கவனிப்புக்குரிய தொன்றாக மாறியது.

மூன்றாம் உலகநாடுகள் பெரும்பாலும் காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு பொருளாதார சமூகச் சுரண்டல்களுக்கு ஆளாகின. இந்நாடுகள் இன்றும் ஆள்வீத வருமானம் குன்றிய நிலையிலும், வாழ்க்கைத் தரம் குன்றிய நிலையிலும் காணப்படுகின்றன. பெருமளவில் மாற்றமடையாத மனோபாவங்களும் சாதி முறைகளும் இன்றும் சில மூன்றாம் உலக நாடுகளிலே நிலவி வருகின்றன. இந்நாடுகளில் மொத்த சனத்தொகையில் பெரும்பாலும் ஒரு சதவீதத்திற்கும் குறைவானவர்களே உயர்ந்த கல்வித்தகைமை பெற்றவர்களாக விளங்குகின்றனர். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்கியலாளர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், சட்ட வல்லுனர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் என்போர் இந்த ஒரு சதவீதத்திற்குள் அடங்குகின்றனர் நாட்டின் அபிவிருத்திக்கு வேண்டிய சிறப்பார்ந்த வலு இவர்களிடம் காணப்படுகின்றது.

### வெளியேறியோரின் பிரதான பண்புகள்

மேற்கூறியவற்றின் பின்

## பலதுறைகளிலும் பலவகைப் பாதிப்புகள்

னணியிலேதான் இன்றைய நிலையில் நமது நாட்டின் மூளைசாலிகள் வெளியேற்றம் பற்றிய ஆய்வை மேற்கொள்ளவேண்டியுள்ளது. வெளியேறிய மூளைசாலிகளினுடைய பிரதான பண்புகளை சமூகவியல்நோக்கிலே பின்வருமாறு சுட்டிக்காட்டலாம்:

(அ) இவர்கள் அனைவரும் இலவசக்கல்வித் திட்டத்தினால் உருவாக்கப்பட்டவர்கள். அதாவது பொதுமக்கள் ஒவ்வொருவரின் உழைப்பும் இவர்களின் கல்விக்கு உரிய மூலதனத்திலே இடம் பெற்றிருக்கிறது.

(ஆ) வெளியேறுவோரில் பெரும்பாலானோர் சராசரி வருமானம் பெறுவோருடன் ஒப்பிடும்போது உயர்ந்த வருமானத்தை இங்கு பெற்றவர்களாகவே இருந்தனர். மற்றவர்களுடன் ஒப்பிடும்போது கூடிய வாழ்க்கைத் தரத்தை அனுபவித்த போதும் திருப்தி கொள்ளாதவர்களாக இடம் பெயர்ந்து சென்றனர்.

(இ) இவர்களை அந்த நாடுகள் வரவேற்பதன் வாயிலாகக் கல்விக்கு எதுவித முதலீடுகளும் இன்றித் தமக்குத் தேவையான ஆள் அணியினரை நிரப்பக் கூடிய இலாபகரமான வாய்ப்பைக் கொண்டிருக்கின்றன.

★ இந்நிலையில்இவர்களுக்குரிய மேலதிகச் சலுகைகள் எதையும் அந்த நாடுகள் வழங்குவதில்லை. பொதுவாக உயர் பதவிகள் ஏதும் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் தொழில் நிறுவனங்களிலும், சமூகத்திலும் கூடுதலான தொழில்நுட்ப வசதிகளையும், வாழ்க்கைத் தரத்தையும் அனுபவிக்கலாமென்றஎதிர்பார்ப்புக்களுடன் தான் அங்கு சென்றிருக்கின்றனர்.

(ஈ) தமது பிள்ளைகளை ஆங்கில மொழிவாயிலாகக் கற்பிக்கலாம் என்ற உணர்வும், இங்கு காணப்படுகின்றது கடும் போட்டிகளின்றி உயர் கல்வி வசதிகளைப் பெறலாம் என்ற எதிர்பார்ப்புகளும் உடையவர்களாக அங்கு சென்றிருக்கின்றனர்.

(உ) இந்நாட்டிலே காணப்படுகின்ற போராட்டச்சூழல், இன்மை நிலை, பொதுவசதிகளின் பாதிப்பு, உயிராபத்துக்களை ஏற்படுத்துகின்ற சம்பவங்கள் என்பவற்றால் தம் சொந்த மண்ணை விட்டு வெளியேறியவர்களும் உளர். இவ்விசையைத் 'தள்ளுவிசை என்று கூறலாம்.

(ஊ) வளர்ச்சியடைந்த நாடுகளிலே காணப்படும் தளம்பலும், குழப்பமும் அற்ற அரசியல் சூழல் மூளைசாலிகளை அங்கு செல்லத் தூண்டுகின்ற 'இழுவிசைகளாக' இருக்கின்றன.

நமது நாட்டிலிருந்து மூளைசாலிகள் வெளியேறுதல் நேரடியானதும், மறைமுகமானதுமான பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. சில நாடுகளின் உதாரணங்களை வைத்துப் பார்க்கும் போது மூளைசாலிகளின் வெளியேற்றம் அந்நாடுகளுக்கு பல்வேறு பொருளாதார வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. உதாரணம் பிலிப்பைன்ஸ் நாட்டில் சில துறை சார்ந்த வல்லுனர்கள் அதிகமாக இருப்பதனால் அவர்களின் வெளியேற்றம் அந்நாட்டுக்கு வெளிநாட்டு நாணயமாற்றைச் சம்பாதித்துக் கொடுப்பதாக அமைகின்றது. இவ்வாறான ஓர் அனுகூலம் நமது நாட்டைப் பொறுத்தவரையில் இல்லையென்றே கூறலாம். ஏனெனில் எமது பிரதேசத்தின் கடல், தரை, நீர், மனித வளங்கள் என்பவற்றை உரிய முறையில் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்குப் போதுமான வல்லுனர்கள் அனைத்துத் துறைகளிலும் இல்லை. நமது நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து சென்ற மூளைசாலிகள் வரிசையில் பொறியியலாளர்கள், கணக்காய்வாளர்கள், வைத்தியர்கள், விஞ்ஞான ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கால்நடை மருத்துவர்கள், விவசாயப் பட்டதாரிகள், முகாமைத்துவப் பட்டதாரிகள், நிர்வாக அதிகாரிகள் என்போர் சிறப்பிடம் பெறுகின்றனர். இந்நிபுணர்களுக்கான பொதுவான பற்றாக்குறை இலங்கை முழுவதும் நிலவி வருகின்றது.

### உயர்கல்வி வாய்ப்பு வீழ்ச்சி

எமது கல்வி வசதிகள்மேற்கூறிய நிபுணர்களின் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்கச் செய்ய முடியாத நிலையில் உள்ளன. பல்கலைக்கழகங்களில் அறிமுகம் செய்யப்பட்ட தரப்படுத்தல் முறைமை காரணமாகத் தமிழ் மக்களின் உயர் கல்வி வாய்ப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. இதனைப் பின்வரும் உதாரணத்தினால் விளக்கலாம். 1969ஆம் ஆண்டில் சகல அறிவியல் துறைகளிலும் கற்றமொத்தத்தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 27.5 சதவீதமாக இருந்தது. தரப்படுத்தல் அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் சகல அறிவியல் துறைகளிலும் இடம் பெற்ற தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 7 சதவீதமாகக் குறைந்தது. (சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் கல்விவளர்ச்சி: பக்கம் 15. கலாநிதி சபா. ஜெயராசா) இதன் காரணமாக மூளைசாலிகளின் உருவாக்கத்தைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் தொடர்ந்தும் பின்னடைவுகளை அனுபவிக்க நேர்ந்து வருகிறது.

மூளைசாலிகள் என்று நாம் குறிப்பிடும் போது அவர்கள் பெற்ற பட்டம் மட்டுமல்ல, அவர்களுக்குரிய அனுபவமும் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகிறது. எமது நாட்டிலே பணிபுரிந்து இந்தச் சூழலுக்குரிய அனுபவங்களைப் பெற்றவர்கள் வெளியேறுவதனால் பெருமளவு தாக்கத்தை அனுபவிக்க நேரிடுகிறது. மேலும் வெளியேறுவோர்களில் பெரும் பகுதியினர் இளம் வயதினராக இருப்பதனால் பாதிப்பு அதிகமாகி உள்ளது இனப் போராட்டம் காரணமாக உடல், உள ரீதியாகத் தமிழ் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். வன்னிப் பிரதேசத்தில் தொடர்ச்சியான குண்டு வீச்சு அவலங்களை அனுபவித்து வருகின்றனர். பதுங்கு குழிகளுக்குள் காற்று அழுத்தமான சூழலிலே தொடர்ச்சியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது நச்சுக்காற்றினால் சூழல் பாதிப்படைகிறது.

பொருளாதாரத் தடைகளினால் உணவுப் பற்றாக்குறைஏற்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் நோய்எதிர்ப்புசக்தி மிகவும் குறைந்து வருகிறது. சிறுவர்கள் புரத உணவுப் பற்றாக்குறையினால் பாதிப்படைந்துள்ளனர். கர்ப்பிணிகள் போதிய போஷாக்கின்றி வாடுகின்றனர். இந் நிலையில் முன்னரிலும் கூடுதலான உடல் நோய்ப் பெருக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகரித்துள்ளது. இவற்றை ஈடு செய்யும் வகையில் வைத்தியர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. உடல் நோய்கள் மட்டுமன்றி உள நோய்களும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. குண்டு வீச்சு, ஏவுகணை வீச்சு என்பனவும் உளத்தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. திடீர் அதிர்ச்சிகளினால் உளச்சமநிலை பாதிக்கப்படுகின்றது. தீராத உள அழுத்தங்கள் (Chronic mental Stress) ஏற்படுகின்றன. காரணமற்ற பயம், தொடர்புள்ள பயம் (phobia) போன்றவையும் ஏற்படுகின்றன. இவ்வாறான யுத்த காலகட்டத்திலே உளநோய் வைத்தியர்களினதும், உளவியலாளர்களினதும், உளவளத்துணை செய்வோரினதும் சேவைகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

கல்வி வளர்ச்சியை நோக்கும் போது ஆசிரியர் பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பெரும்பாலான பாடசாலைகள் 1/3 பங்கு ஆசிரியர்கள் இன்றியே தொழிற்படுகின்றன. கணிதம் இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல், தாவரவியல் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு பயிற்சிபெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகிறது. ஆசிரியர்கள் புலம் பெயர்ந்து சென்றமையினால் இந்த இக்கட்டான நிலை தோன்றியுள்ளது. அனுபவம் பெற்ற கணித ஆசிரியர்கள் இல்லாமையினால் தமிழ்ப் பிரதேசத்தின் கணிதப் பெறுபேறுகளிலே பெரும் வீழ்ச்சி அண்மைக்காலத்தில் ஏற்பட்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

**கார்த்திகை 29**

**செவ்வாய்க்கிழமை**

திதி: துவாதசி
முன் இரவு 11.35 வரை.
நட்சத்திரம்: சுவாதி
பிற்பகல் 4.24 வரை
சுபநேரம்: 10.51-12.21
ராகுகாலம்: 3.21-4.51
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சத்தியமே வெல்லும் என்று உபநிஷத முனிவர் சொன்னார். சத்தியம் என்பது உண்மையாகச் செயற்படுவது.

ராஜாஜி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


### தவறிவிட்டது

கச்சாய் வீதி, சாவகச்சேரி கந்தையா பரமசாமி ஆகிய எனது தேசிய (330621648 V), விசேட அடையாள அட்டைகள் 6-12-98 சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'மிட்லண்ட் வீடியோ' சாவகச்சேரி அல்லது யாழ்ப்பாணம் சித்திராலயா ஸ்ரூடியோவில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(61272)

வாரித்தம்பி சிற்றம்பலம் மாணிக்கம் என்பவரது தேசிய, விசேட அடையாள அட்டைகளும், வங்கிப் புத்தகமும் 16.11.98 அன்று யாழ். பஸ் தரிப்பிடத்தில் தவறிவிட்டன. அவற்றைக் கண்டெடுத்தவர்கள் V S மாணிக்கம் (மொழியரசி) வட்லியடைப்பு, பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு தயவு செய்து அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(61293)

### வகுப்பு

சிங்கள எழுத்து பேச்சுப் பயிற்சி புதிய சிங்கள வகுப்பில் சேர்ந்து கொள்ள விரும்புவோரும் தாமதமின்றி தொடர்பு கொள்ளவும்: T. Sagathevan, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

(61268)

1999 G. C. E. (O/L)பரீட்சையில் ஆங்கிலத்தில் Distinction பெறுபேற்றிற்கான விசேட வகுப்பு விரைவில் ஆரம்பமாகவுள்ளது. இருபது பேருக்கு மேல் எக்காரணம் கொண்டும் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது. உடன் தொடர்பு கொள்ளவும்: T. Sagathevan, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(61266)

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் இடம்பெயர்வின் கதை. வாங்கி வெளிநாடுகளில் உள்ள உங்கள் நண்பர்களுக்கும், உறவினருக்கும் அனுப்புங்கள். இங்கு நடந்ததை அவர்களும் அறியட்டும். ரூபா 50 மட்டுமே.

(61305)

### காணவில்லை

யாழ்ப்பாணம் மாவட்ட தொழில் அலுவலகப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்ட எனது புதிய ஆண்களுக்கான லுமாலா துவிச்சக்கரவண்டி (இல 55540289) காணாமற் போய்விட்டது. இது பற்றி அறிந்தால் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். கந்தையா செல்வராசா, மாவட்ட தொழில் அலுவலகம், யாழ்ப்பாணம்.

(61277)


# அமைய சுகாதாரத் தொழிலாளர்

சண்டிலிப்பாய், டிசெ. 14

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் 16 அமைய சுகாதாரத் தொழிலாளர்கள் யாழ். சுகாதார சேவைபிரதி மாகாணப்பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 12 பேர் பெண்களாவர்.

இதன் மூலம் இந்த வைத்தியசாலையில் நிலவிய சிற்றூழியர் பற்றாக் குறை நீங்கியுள்ளது. (இ-135)

# குறைந்தளவு நிலப்பரப்பிலேயே இம்முறை உருளைக்கிழங்கு செய்கை

அரியாலை, டிசெ. 14

யாழ். மாவட்டத்தில் இம்முறை குறைந்த அளவிலான நிலப்பரப்பிலேயே உருளைக் கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது 21 ஹெக்டேயர் நிலப்பரப்பிலேயே விதை உருளைக்கிழங்கு நடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 4 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நடுகை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முறை குறைந்த நிலப்பரப்பிலேயே நடுகை மேற்கொள்ளப்பட்டிருப்பதால் பெரும் விளைச்சலை எதிர்பார்க்க முடியாது என்றும்—

தற்போது பெய்துள்ள மழையினால் உருளைக்கிழங்குச்செய்கை சிறு பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்

உரும்பிராய், உடுவில், புத்தூர் போன்ற விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் வெள்ளம் ஏற்பட்டிருப்பதால் உருளைக்கிழங்குப் பயிருக்கு சிறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# இணைப்புக்குழுக் கூட்டம்

தென்மராட்சி, டிசெ. 14

பளைப் பிரதேசத்தில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக பிரதேச இணைப்புக்குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்த ஆண்டு பிரதேசத்தில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி திட்ட முன்மொழிவுகளை அன்றைய தினம் சமர்ப்பிக்குமாறு பிரதேசத்தில் உள்ள திணைக்களங்கள் பொது அமைப்புகளுக்கு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (ஐ-117)

# முதற்கட்டக் கொடுப்பனவு

வலிகாமம் கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் போர் அனர்த்தங்களால் சேதமுற்ற வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கென மேலும் 193 பேருக்கு முதற்கட்டக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இவர்களுடைய கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தினால் உரியவர்களுடைய வங்கிக் கணக்கில் இடப்பட்டிருப்பதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முதற்கட்டக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா ஏற்கனவே 192 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 200 பேருக்கு இவ் வருடத்திற்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# உணவுப் பொருள்களின் விலைகள் வன்னியில் மிக உயர்ந்துள்ளன

## அங்கு சென்று திரும்பிய ஒபடகே தெரிவிப்பு

கொழும்பு, டிசெ 14

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் பொருள்களின் விலைகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு வடபகுதி மீள் குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் ஒபடகே தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு நேரில் விஜயம் செய்து திரும்பிய பின்னர் ஒபடகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பகுதி அரச அதிபர்களால் வழங்கப்பட்ட சனத்தொகை புள்ளி விவரங்களுக்கும் படையினரால் வழங்கப்பட்ட புள்ளி விவரத்துக்கும் இடையே வேறுபாடு காணப்படுகின்றன. முதலில் அதற்குத் தீர்வுகாண வேண்டும். புள்ளி விவரத்தில் காணப்படும் வேறுபாடுகளுக்குத் தீர்வு காணப்படும் வரை தற்காலிகமாக நிவாரணம் வழங்க வேண்டிய சூழ்நிலையே அங்குள்ளது என்றும் ஒபடகே மேலும் தெரிவித்துள்ளார்.

தமது துன்பங்கள் நிவாரண வெட்டினால் ஏற்படும் கஷ்டங்கள் என்பன குறித்து அப்பகுதி மக்கள் ஒபடகேயிடம் விரிவாக எடுத்துக் கூறியதாகவும் நிவாரண வெட்டை அமுல்படுத்த வேண்டாம் என மக்கள் ஒபடகேயிடம் கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

நிவாரண வெட்டினால் வன்னியில் ஏற்பட்டுள்ள நிலை தொடர்பாகவும், புள்ளிவிவர வேறுபாடு மற்றும் உணவுத் தட்டுப்பாடு, விலை ஏற்றம் என்பன தொடர்பாகவும் விரிவான அறிக்கை ஒன்றை விரைவில் ஒபடகே ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# நிவாரணம் விநியோகம்

தென்மராட்சி, டிசெ. 14

பளைப் பிரதேசத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் நிவாரண முத்திரையின் 69 ஏ, 69 பி ஆகிய புள்ளிகளுக்கான உணவுப் பொருள்களை டிசெம்பர் 27 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பிரிவு ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

# பளைப் பகுதி ஓய்வூதியருக்கு நிலுவையுடன் ஓய்வூதியம்

தென்மராட்சி, டிசெ. 14

பளைப் பிரதேச ஓய்வூதியர்களுக்கு 1988 ஜனவரி முதல் 1989 ஜூன் வரையான காலப் பகுதிக்குரிய வாழ்க்கைச் செலவுப்படி நிலுவைத் தொகை டிசெம்பர் மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி காலப் பகுதிக்குரிய நிலுவைத் தொகையைப் பெறத் தகுதியுள்ள ஓய்வூதியர்களின் பட்டியல் கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியக் கிளையினால் பளைப் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து நிலுவைத் தொகை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கு இக் கொடுப்பனவு கடந்த மே மாதம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நால்வர் சித்தி

அண்மையில் வெளியான பொது எழுதுநர் சேவை தரம் II 'அ' பிரிவு பதவியுயர்வுப் பரீட்சையில் பளைப் பிரதேச செயலகத்திலிருந்து நால்வரும், பளைப் பிரதேச சபையிலிருந்து ஒருவரும் சித்தியடைந்துள்ளனர்.

பிரதேச செயலகத்தைச் சேர்ந்த க. ஜெயஸ்ரீ, யோ. அமலதாஸ், தா. சயந்தினி, நா. ஸ்ரீரங்கநாதன், பிரதேச சபையைச் சேர்ந்த கு. குணரூபன் ஆகியோரே சித்தியடைந்தவர்களாவர்.

# மூக்குக் கண்ணாடிகளை எடுத்து வருவது பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

குடாநாட்டில் உள்ள மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர்கள் அத்தியாவசிய மூக்குக் கண்ணாடி பாவனையாளர்க்குரிய மூக்குக்கண்ணாடிகளை விநியோகிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

யாழ்ப்பாணம், கொழும்புக்கான போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளதே இதற்குக் காரணமாகும்,

யாழ்ப்பாணத்தில் மூக்குக் கண்ணாடித் தொழில் நுட்பவியலாளர்கள் பலர் இருந்தபோதிலும் தொழில் உபகரணங்கள் இல்லாத காரணத்தால் பல்வேறு பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கான மூக்குக்கண்ணாடிகள் கொழும்பில் இருந்தே தருவித்து வழங்கப்பட்டு வந்தன. யாழ்ப்பாணம் கொழும்புக்கான விமானப்போக்குவரத்துச் சேவை இருந்த காலத்தில் இக் கண்ணாடிகளைக் குறிப்பிட்ட சில நாள்களுக்குள் பாவனையாளர்களுக்கு வழங்க முடிந்தது.

போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பதால் இலவச மூக்குக்கண்ணாடிகளை வழங்கி, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உதவியளித்து வரும் தொண்டு நிறுவனங்களும் தமது சேவைகளைச் சரிவரப் பூர்த்தி செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

(ஐ-15)

# சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், டிசெ, 14

சரிந்து விழுந்த றாக்கை ஒன்றுக்கிடையில் அகப்பட்டு சிறுவன் படுகாயமடைந்தார்.

கொக்குவில் மேற்கு சிப்பித்தறைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பூபாலசிங்கம் அருட்செல்வன் (வயது 14) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

# மிதிவெடி விழிப்புக் கருத்தரங்கு

தென்மராட்சி, டிசெ. 14

நுணாவில் மத்தி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான கண்ணிவெடி, மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் கிராம அலுவலர் திருமதி ச. சுந்தரலிங்கத்தினால் நடத்தப்பட்டது.

(ஐ-117)

# ஆடுகள் திருட்டு

வலி. கிழக்கு, டிசெ. 14

வீட்டில் ஆட்டுக் கொட்டிலினுள் கட்டப்பட்டிருந்த இரு ஆடுகள் இரவுவேளை களவாடப்பட்டுள்ளன.

கொக்குவில் கோணாவளை வீதியில் உள்ள ஒரு வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமைஇரவு பத்துக்கும் மேற்பட்ட ஆடுகள்இக்கொட்டிலினுள்கட்டப்பட்டு இருந்ததாகவும் இரு ஆடுகளைத் திருடர்கள் கயிற்றுடன் அறுத்துக் கொண்டு போய் விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-180)


## பெயர் மாற்ற அறிவித்தல்

சிறிநாரதா வித்தியாசாலை ஒழுங்கை கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சங்கரன் சூரியோதயம் ஆகிய நான் எனது மகள்

பிரேமல் (வயது 10)

என்பவர் தமது பெயரை இன்று தொடக்கம்

பிருந்தா

என மாற்றியுள்ளார் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

சங்கரன் சூரியோதயம்,
சிறி நாரதா வித்தியாசாலை ஒழுங்கை,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (61289)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

## வெளிவாரிப் பரீட்சைகள் ஒத்தி வைத்தல்

கலைமாணிப் பொதுத்தேர்வு - பகுதி-II 1996

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகள் 15 - 12 - 98 இல் (நாளை) ஆரம்பமாகவிருந்தன. இப்பரீட்சைகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் மறு அறிவித்தல் வரை ஒத்திவைத்துள்ளமையை அறிவிக்கின்றோம். பரீட்சைகள் பற்றிய புதிய திகதியானது பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/5789)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு – கிழக்குப் பகுதியில் சமுர்த்தி திட்டங்கள், கொடுப்பனவுகள் விரைவில்

## அமைச்சர் திசநாயக்கா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

வடக்கு—கிழக்கில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களை நியமிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் வடக்கு—கிழக்கில் சமுர்த்தித் திட்டங்கள், கொடுப்பனவுகள் குறித்து நாம் திருப்திப்படவில்லை. விரைவில் இந்தக் குறை தீர்க்கப்படும்.

சமுர்த்தி, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திசாநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சமுர்த்தி, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சுக்கான குழு நிலை விவாதம் நாடாளுமன்றில் இடம்பெற்ற போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:-

வறுமையில் வாடும் மக்களின் திருமணம், மரணம், குழந்தை பிறப்பு போன்ற நிகழ்வுகளுக்கு நாம் சமுர்த்தி வங்கிகளின் மூலம் 5 ஆயிரம் ரூபா வழங்குகின்றோம். இதனை மீளப்பெறுவதற்கு 12 வருடங்களாகின்றன. இவ்வருட இறுதிக்குள் ஆயிரம் சமுர்த்தி வங்கிகள் திறந்து வைக்கப்படும். ஏற்கனவே 600 வங்கிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வறுமை நிவாரணம் வழங்கி ஒரு போதும் வறுமையை முற்றாக ஒழிக்க முடியாது. இதனால் தான் சமுர்த்திவங்கிகள் மூலம் கடன் வழங்கி வருகின்றோம். இந்த வங்கிகளின் தலைவராகவும் பணிப்பாளர் சபைகளிலும் சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களே நியமிக்கப்படுவார்கள்.

—என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை—

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வை. பாலச்சந்திரன் உரையாற்றும்போது—

நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு மூன்றுபேர் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நியமனம் செய்யப்படுவது போன்று வடக்கு—கிழக்குப் பகுதிகளிலும் நியமிக்கப்படவேண்டும்—என்று கேட்டுக்கொண்டார்.

வவுனியாவிலும் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு ஒரு சமுர்த்தி முகவர் மட்டுமே நியமிக்கப் பட்டுள்ளார். எனவே இந்த வேறுபாட்டை அமைச்சர் நீக்க வேண்டும் என்று வை. பாலச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

(ஐ 6)

# மயானத்தில் விறகு திருட்டு; தடுப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 14

செம்மணி இந்து மயானத்தில் விறகுத் திருட்டு மற்றும் விசமிகளின் செயல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

மயானத்துக்கு பகல் நேர காவலாளி ஒருவர் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சடலங்களை எரிப்பதற்காக விறகுகளை எடுத்து வந்து மயானத்தில் அடுக்குவோர் காவலாளியுடன் ஒத்துழைக்க வேண்டும்என்றும்—

ஏதாவது சந்தர்ப்பத்தில் அடுக்கிய விறகுகளைத் திருப்பி எடுத்துச் செல்ல வேண்டி ஏற்பட்டால் அது குறித்து முன்னரே காவலாளியிடம் அல்லது மயான அபிவிருத்திச்சபைப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்க வேண்டும் என்றும் —

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின் செயலாளர் வ. பரமசிவம் தெரிவித்தார்.

அண்மையில் மயானத்தில் எரிக்கப்பட இருந்த ஒரு சடலத்தை சட்ட நடவடிக்கைகளுக்காகப் புதைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

அந்தச் சடலத்தை எரிப்பதற்காக முன்னரே மயானத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த விறகுகள் பின்னர் காணாமற் போனதாக முறையிடப்பட்டுள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களில் முறைகேடான வகையில் விறகு அபகரிக்கப்படுவதைத் தடுக்க மயானப் பாவனையாளர்கள் ஒத்துழைக்க வேண்டும் — என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# சுன்னாகம் சந்தியில் மோ. சைக்கிள் திருட்டு

சுன்னாகம், டிசெ. 14

சுன்னாகம் சந்திக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று துணிகரமாகத் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனியன்று மாலை 6.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சுன்னாகம் சந்தியிலுள்ள தேநீர்க்கடையின் ஓரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அதன் உரிமையாளர் உள்ளே சென்று வெற்றிலை போட்டுக் கொண்டு திரும்பி வருவதற்குள் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளைப் பூட்டாமல் திறப்பை அதிலேயே விட்டுச் சென்றமையாலேயே இத் திருட்டு சுலபமாக நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் பருத்திக்கலட்டியைச் சேர்ந்த அப்பன் என்பவரே இச்சம்பவத்தில் தனது மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தவராவார்.

(ஐ-27)

# ச. ச. நிலைய கட்டடம் அமைப்பு

அத்தாய் விநாயகர் சன சமூக நிலையம் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம் அமைக்கப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (ஐ-173)

# வேலைத் திட்டங்கள் தயாரிப்பு

நீர்வேலி, டிசெ. 14

1999 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வலி. கிழக்குப் பிரதேச சபை தயாரித்துள்ளது.

மேற்படி சபைத் தலைவரின் அங்கீகாரத்துடன் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-110)

# 60 ஆயிரம் ரூபா செலவில் பாலம் புனரமைப்பு

வலி. தென்மேற்கு, டிசெ. 14

நவாலி ஆரியம்பிட்டி மயானத்துக்குச் செல்லும் பாலம் ரூபா 60 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாலத்துக்கும் மயானத்துக்கும் இடைப்பட்ட பாதை பெருப்பிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை — கட்டிமுடிக்கப்பட்ட இந்தப் பாலத்துக்கு மழை நீரை நிறுத்தக் கூடிய தடுப்புப் பலகைகள் போடப்படவில்லை என விவசாயிகளால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-185)

# சுன்னாகம் கடைகள் திறந்திருக்கும்

நீர்வேலி, டிசெ. 14

சுன்னாகம் வர்த்தக சங்கத் தொழிற் பரப்பில் எதிர்வரும் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வாடிக்கையாளர்களின் நலன் கருதி சகல வர்த்தக நிலையங்களும் முழுமையாகத் திறந்து வியாபாரம் செய்ய வர்த்தக சங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

(ஐ-110)

# மூளைசாலிகள்...

(ஏழாம் பக்கத் தொடர்)

டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் தான் கணிதக் கல்வி இலங்கையில் மேலோங்கி நின்றது. ஆனால் அந்நிலை இன்று எதிர்மாறாகக் காணப்படுகின்றது. அகஸ்தே கொம்தே என்ற சமூகவியலாளர் கணித அறிவே அனைத்து விஞ்ஞானத்துக்கும் அடிப்படை என கூறியுள்ளார். It is the queen of sciance. எனவே கணித அறிவிலே பின்தங்குகின்ற போது எமது கல்வியின் நிலை மேலும் பாரதூரமான விளைவுக்கு உட்படுத்தப்படுகிறது. எந்த நாடு கணித அறிவிலே பின்தங்க நேரிடுகிறதோ அந்த நாடு மூளைசாலிகளின் வெளியேற்றத்தினால் பாதிக்கப்பட்ட நாடாகிறது. மூளைசாலிகளின் வெளியேற்றத்தைக் காட்டுகின்ற ஒரு சுட்டியாகக் கணித அறிவின் வீழ்ச்சி கொள்ளப்படுகிறது.

ஆனால் துரதிஷ்டவசமாக இங்கிருந்து வெளியேறிய பல கணித ஆசிரியர்களும், கணித ஆசிரிய ஆலோசகர்களும் மேலை நாடுகளில் வேறு பல தொழில்களிலே ஈடுபட்டு வருகிறார்கள் என்பதுவும் ஆய்வுகளிலிருந்து புலப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் கல்விக்கும் தொழிலுக்குமிடையே இசைவின்மை காணப்படுவதை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. எமது நாட்டிலே தாம் படித்த கல்விக்குரிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்று கூறுபவர்கள் வெளிநாட்டில் தாம் ஈட்டுகின்ற வருமானத்தை இலங்கை ரூபாவில் கணிப்பிட்டுத் திருப்பி அடைக்கிறார்களேயொழிய தாம்கற்ற கல்வியைப் பற்றி அக்கறை கொள்ளாதவர்களாகவே பெரும்பாலும் காணப்படுகிறார்கள். இந்நிலை பிலிப்பைன்ஸ் நாட்டுமூளைசாலிகளின்வெளியேற்றத்திலும் காணப்படுகிறது. உதாரணமாக பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வெளியேறிய வைத்தியர்களில் ஒரு சாரார் மேற்கு நாடுகளில் வாடகைக்கார்ச் சாரதிகளாக உள்ளனர். ஆதாரம் (Development And Co–oporation No. 3 - 1989)

மூளைசாலிகளுடைய வெளியேற்றத்தினால் பெருமளவு பாதிக்கப்பட்ட நிறுவனமாக யாழ். பல்கலைக்கழகம் விளங்குகின்றது. மருத்துவ பீடம், பெரும்பாலான பாடத்துறைகளுக்குரிய பேராசிரியர்கள் இன்றியே இயங்கி வருகின்றது. வர்த்தக, முகாமைத்துவ பேராசிரியர் பதவி பல காலமாக விளம்பரப்படுத்தப்பட்டும் நிரப்பப்படாத நிலையில் உள்ளது. இத்தகைய நவீன துறைகள் மட்டுமன்றி எமது பாரம்பரியமான துறைகளுக்குரிய பேராசிரியர் பதவிகளும் நிரப்பப்படாது உள்ளன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடைய முன்னேற்றம் தொழில்நுட்ப அறிவினைப் பயன்படுத்துவதிலே அதிகம் தங்கியுள்ளது. மோட்டார் வாகன உபயோகத்தின் அதிகரிப்பு, நீர் இறைக்கும் இயந்திரத்தினுடைய பாவனை அதிகரிப்பு, மோட்டார் வள்ளங்களினுடைய பாவனை அதிகரிப்பு, மா அரைத்தல், நெல் குற்றுதல் போன்றவற்றிலே இயந்திரப் பாவனை அதிகரிப்பு, மின்சாரத்தினுடைய பாவனை அதிகரிப்பு போன்றவை எமது நாட்டிலே நிகழ்ந்த தொழில்நுட்ப முன்னேற்ற நடவடிக்கைகளாகும். தொடர்பியலிலும் ( Communication ) தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டு வந்தது. வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி போன்றவையும் மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற சாதனங்களாக அமைந்துள்ளன. சிறிய கைத்தொழில் வளர்ச்சியும் படிப்படியாக வளர்ந்து வந்தது.

### 25 வருடங்கள் பின்னே ...

ஆனால் தற்போது இந்நிலையிலிருந்து இருபத்தைந்து வருடங்கள் பின்சென்றுள்ளோம். இவற்றை வினைத்திறனுடனும் மேலும் முன்னேற்றத்துடன் செயற்படுத்த பொறியியல் அறிவு வேண்டப்படுகிறது. யுத்த நிலைவரங்களால் மின் விநியோகம் தடைப்பட்டாலும் மாற்று வழிகளைக் கண்டுபிடிக்கக் கூடிய பொறியியல் திறன் உடனடியாக வேண்டப்படுகின்றது. எமது பிரதேசத்தில் வெப்ப வலுவும் காற்று வலுவும் மிகையாக இருந்தாலும் அவற்றை விருத்தி செய்யக்கூடிய மூளைசாலிகளின் பலமும், நிதிப்பலமும் இல்லாதிருக்கின்றது. இங்கிருந்து வெளியேறிய மூளைசாலிகள் தாம் சம்பாதிக்கும் பணத்தைச் சேமித்து இங்கு முதலீடு செய்யப் பொதுவில் கவர்ச்சியற்றவர்களாகவே உள்ளனர். வெளிநாடுகளில் உள்ள பொறித் தொகுதிகளை இங்கு கொண்டுவந்து நவீன தொழில்நுட்பவியலை அறிமுகம் செய்வதற்கும் தயக்கம் காட்டுகின்றனர்.

( வளரும் )

# வாதுவவில் கார்கள் வந்தன

வடமராட்சி, டிசெ. 14

கொழும்பிலிருந்து சில ஆடம்பரக் கார்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

'வாதுவ' கப்பலில் எடுத்து வரப்பட்ட 5 ஆடம்பரக் கார்கள் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து இறக்கப்பட்டு அதன் உரிமையாளர்களால் பொறுப்பேற்று எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த ஆடம்பரக் கார்கள் யாவும் கொழும்பில் பாவனையில் இருந்தவையாகும்.

(ஐ- 173)

# 'கற்பகம்' சஞ்சிகை வெளியீடு

உரும்பிராய், டிசெ. 14

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவர் மன்றத்தின் 'கற்பகம்' சஞ்சிகை வெளியீட்டு விழா மேற்படி வித்தியாலய மண்டபத்தில் செல்வி ம. சசிகலா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறைத் தலைவர் வி.பி. சிவநாதன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் ஆ. இராஜேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

தேசிய சேமிப்பு வங்கி அலுவலர் சி. நந்தகுமார் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

பூ. புலேந்திரராசா ஆய்வுரை வழங்கினார். ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், அதிபர் அ. ஈஸ்வரநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். (ஐ-154)

# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளியம்மை பரமலிங்கம்

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை பரமலிங்கம் 13-12-98 நேற்று ஞாயிற்றுக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மாரிமுத்து முத்துப்பிள்ளையின் அன்பு மகளும், திரு. திருமதி சின்னட்டியரின் மருமகளும் பரமலிங்கம் (உரிமையளர்; நித்தியானந்தா ஸ்ரோர்ஸ்-இணுவில், ஸ்ரீ விசாலாட்சி தேவஸ்தான சபையின் 3ஆம்இலக்க கடை, இணுவில்) அவர்களின் அன்பு மனைவியும் நித்தியலட்சுமி, காலஞ்சென்ற நித்தியானந்தன் (B. A.). சிவபாக்கியம் ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற இராமலிங்கம், கனகம்மா, இராமச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மார்க்கண்டு, நமசிவாயம் ஆகியோரின் அன்பு மாமியும், கணேசலிங்கம் (லண்டன்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), வரதலிங்கம் (பிரான்ஸ்), கிருசாந்தி (லண்டன்), ரஞ்சிதமலர் (லண்டன்), ஜமுனாம்பிகை (லண்டன்), கயிலாயநாதன் (பிரான்ஸ்), சுரேந்தினி (பிரான்ஸ்), ஆனந்தலிங்கன் (லண்டன்), சாந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், திவ்வியாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-12-98) திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. பரமலிங்கம் (கணவர்)
61/5, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(61315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது புதிய
வீடியோ CD
வெளியீடுகள்!
கரன், குஷ்பு, வடிவேலு
நடித்த
கண்ணாத்தாள்
(பிரமிட் CD)
அஜித், ரிச்சா
நடித்த
உயிரோடு உயிராக
(பிரமிட் CD)
பிரகாஷ்ராஜ்
நடித்த
குருபார்வை
புதிய படப் போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.
சுப்பஸோ
வீடியோ ஓடியோ
யாழ்ப்பாணம்.
(சி/5794)

எமது புதிய
CD வெளியீடு!
கரன், நீனா, குஷ்பு,
வடிவேலு, மணிவண்ணன்
நடித்த
கண்ணாத்தாள்
(பிரமிட் CD)
பிரதி ஒன்று ரூ. 300/-
பிரதிகள் உடன்
பெற்றுக்கொள்ளலாம்.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/ 5793)

## தொண்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்)

சங்கடமான ஒன்று என்றாலும் சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்கே அச்சுறுத்தலாகி விட்டது என்று கூற முடியாது என்று பி. பி. சி. மேலும் தெரிவித்தது.

அதேசமயம் எதிர்க்கட்சி உறுப்பினரான டிரோன் பெர்னாண்டோ "தொண்டமானுக்கு சிறிதாவது தன்மானம் இருந்தால் அவர் பதவி விலக வேண்டும்" என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தொண்டமான் பதவி விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இ.தொ.கா. அறிவித்துள்ளது.

தொண்டமான் சிறுபான்மை இனமான தமிழ் இனத்தைச் சேர்ந்த உறுப்பினர் என்பதாலேயே எதிர்க்கட்சி அவருக்கு எதிராக வாக்களித்தது என்று அரசு குற்றம் சாட்டி உள்ளது. இதனை எதிர்க்கட்சி மறுத்துள்ளது.

இதற்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தில் தோல்வியடைந்த கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறை நிரப்புப் பிரேரணை மூலம் பெறப்படும் என்று கால்நடை அபிவிருத்தி, பெருந்தோட்ட பொதுவசதிகள் பிரதி அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எஸ். பீரிஸ், இரத்தினசிறி விக்கிரமநாயக்க, ரிச்சாட் பத்திரான ஆகியோர் நிதியமைச்சின் செயலாளர் டிக்ஷன் நிலவீரவுடன் கலந்துரையாடி வருவதாகவும்—

விரைவில் குறை நிரப்புப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

## சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ததாலேயே இந்நிலை ஏற்பட்டதாகவும் —

உரிய காரணம் காட்டத் தவறும் எம். பிக்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதைத்தவிர வேறு வழியில்லை என்றும் — அமைச்சரவை உறுப்பினர்களிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாளை முதல் நாடாளுமன்ற அமர்வுகளில் அரச உறுப்பினர்கள் பிரசன்னமாயிருக்க வேண்டும் என்றும்—

முக்கிய தேவை நிமித்தம் வெளிநாடு செல்ல வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மிடம் அனுமதி பெற்றே செல்லவேண்டும் என்றும் — ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-10)

## மன்னம்பிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்யப்பட்ட பஸ்ஸில் வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டதும்—

அது தொடர்பாக ஆறு பேர் கைதானதும்— தெரிந்தவையே.

சம்பந்தப்பட்ட பஸ்ஸையும் ஏனைய பயணிகளையும் நேற்று செல்ல பொலீஸார் அனுமதித்தனர்.

கைதான 6 பேரும் நெல் அறுவடைக்காகத் திருகோணமலையில் இருந்து கொக்கட்டிச்சோலைக்குச் சென்று வேலை முடிந்து திரும்பிக் கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தாதிகள் தேவை
யாழ். நகரில் விரைவில் 24 மணி நேரமும்
இயங்கவுள்ள வைத்தியசாலைக்கு
தாதிகள் தேவை.
தகுதியானவர்களிடம் இருந்து
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
JAFFNA MEDICAL CENTRE
166, 1 st Cross Street,
Jaffna.
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)
- நிர்வாகி
(61307)

வெளிவாரிப் பட்டப்படிப்பை
மேற்கொள்பவர்களுக்கான
பிரத்தியேக
ஆங்கில வகுப்புகள்
(விசேட பயிற்சிகளுடன்)
ஆரம்பம்: 23-12-98
4-00 p. m.
OXFORD
ENGLISH
ACADEMY
ஆலடிப்
பிள்ளையார் வீதி,
சுப்பர் மடம்,
பருத்தித்துறை.
By:- Mr. JOTHY
(அனுமதிகளை
நேரில் பெறவும்.)
(61288)

உ
★ மங்களகரமான திறப்பு விழா ★
மீண்டும் யாழ். பரமேஸ்வராச் சந்தியில்
வீடியோ எக்கணமி
அன்புடையீர்!
நிகழும் வெகுதானிய வருடம் கார்த்திகை மாதம் 28 ஆம் நாள் (14 - 12 - 1998) திங்கட்கிழமை காலை 11.18 — 12.00 மணி வரையான சுபநேரத்தில்
வீடியோ எக்கணமி
மியூசிக் கோணர்
VIDEO ECONOMY
MUSIC CORNER
என்னும் ஸ்தாபனம் திறந்து வைக்கப்பட இருப்பதால் அன்பர்களையும் நண்பர்கள், வாடிக்கையாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
★ வீடியோ CD திரைப்படப் பிரதிகளுக்கும்
★ கொம்பக்ற் டிஸ்கிலிருந்து பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்வதற்கும்
297, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.
கிளை: 612/4, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(61304)

# 400 பேர் கொண்ட கும்பல் பிக்குவைகொலைசெய்தது

## மாத்தளையில் சம்பவம்

கொழும்பு, டிசெ. 14

மாத்தளை நாவுளவில் உள்ள தலாகொட விகாரை பிரதம குருவான கொத்மலை திலக தம்மதேரர் (64 வயது) அப்பகுதியைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட கிராமவாசிகள் பொல்லுகள், கற்களால் தாக்கப்பட்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

மரண நன்கொடைச் சங்கத்தின் கூட்டம் ஒன்றை நடத்த விகாரை மண்டபத்தைத் தருமாறு அவ்வூர் மக்கள் கோரினர்

மண்டபத்தைத் தர முடியாது என்று தெரிவித்து கிராமவாசிகள் மீது அந்தப்பிக்கு அசிட்டை வீசினாராம்.

இதனால் நான்கு கிராமவாசிகள் பலத்த காயத்துக்குள்ளானார்கள். அதன்பின் அக்கிராமத்தை சேர்ந்த 400 க்கு மேற்பட்ட பொதுமக்கள் பொல்லுகள், கற்களுடன் விகாரைக்குள் புகுந்து பிக்குவைத் தாக்கினர்.

இதனால் படுகாயமடைந்த பிக்கு பின்னர் மரணமானார்.

இது தொடர்பாக விசாரணை செய்த பொலீஸார் 19 பேரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

(இ-3-10)

# கோப்பாய்-கைதடிவீதியில் பஸ் சேவை ஆரம்பிக்குக

## பயணிகள் கோரிக்கை

உரும்பிராய், டிசெ. 14

கோப்பாய் — கைதடிப் பாதையில் மீண்டும் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர்.

இப்பாதை செப்பனிடப்படாததனாலும், மத்தியில் அமைந்திருக்கும் கோப்பாய்ப் பாலம் பழுதடைந்து இருந்ததனாலும் முன்னர் இப்பாதையில் போக்குவரத்து அனுமதிக்கப்படவில்லை.

இப்போது பாலம் திருத்தப்பட்டு, வீதி செப்பனிடப்பட்டுள்ளது. ஆகவே பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு பயணிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-154)

## ஈழத் தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

சர்வதேச மன்னிப்புச் சபையின் அமெரிக்கக் கிளையைச் சேர்ந்த ஸ்ரீபன் றிச்சாட், மனித உரிமை நிபுணரான எலிசபெத் போவன் ஆகியோர் கலந்து கொண்டு இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல் செயல்களைக் கண்டித்து உரையாற்றினர்.

அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தைச் சேர்ந்த ஜெரி ஹூடஸ் என்பவரும் பங்குபற்றினார்.

இந்த நிகழ்வில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ வடக்கில் காணாமற் போனோரின் நிலைமை மிக மோசமாகஉள்ளது. செம்மணி புதைகுழியைத் தோண்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

★ தமிழ் மக்கள் மீதான போக்கு மிக மோசமாகிக் கொண்டு போகிறது. அதைத் தடுக்க உருப்படியான முன்னேற்றமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

★ மனித உரிமை மீறலில் ஈடுபட்டு வரும் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது— தண்டனை வழங்குவது — குறைவாகக் காணப்படுகிறது. பல வழக்குகளில் படையினருக்குத் தண்டனை வழங்கப்படவில்லை.

★ இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை மோசமாகிக் கொண்டு போகின்றது. அவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ-3)

## நகருக்கு...

(முதலாம் பக்கத்தொடர்)

அங்கே தங்கி நின்றனர். அவர்களுக்கு உணவு வகைகளை ஈ.பி.டி.பி. அமைப்பினர் வழங்கினர்.

திருகோணமலையில் கண்ணாடித் தொழிற்சாலை அகதி முகாமில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள் மட்டும் காங்கேசன்துறைப் பட்டணசபை மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

வழமையான சோதனைகள் முடிவடைந்ததன் பின்னர் அவர்கள் இன்று யாழ். நகருக்கு அழைத்து வரப்படுவர் என்றும்—யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார். (இ-3)

## கிராமசேவையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இளைப்பாறிய நில அளவையாளர் நடராசா கேதீஸ்வரன் என்பவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

இருவரும் கைது செய்யப்பட்டதுக்கான ரசீது வழங்கப்பட்டுள்ளது.

இவர்களின் கைதுதொடர்பாக இவர்களின் உறவினர்கள்மனிதஉரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறையீடு செய்தனர்.

இதையடுத்து ஆணைக்குழுவின் அதிகாரி எஸ். சிறீதரன் 512 பிரிக்கேட் தளபதியுடன் தொடர்பு கொண்டு இவர்கள் தொடர்பாக விசாரித்த சமயம், இருவரும்விசாரணை செய்யப்பட்டு வருவதாக பதில் கூறப்பட்டதாக சிறீதரன் தெரிவித்தார்.

(இ-3-180)

## முத்தையன்கட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த விமானத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிவரங்கள் பற்றித் தெரியவரவில்லை.

அதே சமயம் கற்சிலை மடுப்பகுதியை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-9)

## லங்கா முடித்த...

(முதலாம் பக்கத் தொடர்)

வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் பயணம் செய்ய டிக்கெட் பெறுபவர்களை பயண ஏற்பாடுகளுடன் நாளை காலை 9. 00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்14-12-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org